
# வானவில்

# VAANAVIL

இதழ் 118 | ஐப்பசி 2020

ISSUE 118 | OCTOBER 2020


# நெருக்கடிகளிலிருந்து இலங்கை மீள்வது எப்போது, எவ்வாறு?




இலங்கை 'நெருக்கடிகளிலிருந்து' மீள்வது எவ்வாறு என்பது இன்று மிகப்பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

நெருக்கடிகள் எனும்போது ஒரு நெருக்கடி அல்ல, பல நெருக்கடிகள் என்று அர்த்தம்.

வழமையாக அவை அரசியல் சூழல், பொருளாதார நெருக்கடி, அந்நிய நிர்ப்பந்தம், இனப்பிரச்சினை என்ற வகையறாக்களுக்குள் அடங்கிவிடும். ஆனால் இவ்வருட ஆரம்பத்தில் உருவான கொரோனா என்ற நோய்த்தொற்று மேலதிகமாக இலங்கையையும் பெருமளவுக்குப் பாதித்துள்ளது.

2019 நொவம்பர் வரை ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான 'நல்லாட்சி' அரசாங்கம் இலங்கையை பெரிய அளவுக்குச் சீரழித்துவிட்டுச் சென்றது. சென்றது என்பதை விட அவ்வரசு மக்களால் தூக்கியெறியப்பட்டது என்பதே சரியான வார்த்தைப் பிரயோகமாகும். அந்த அரசை மக்கள் எவ்வளவு தூரம் வெறுத்தார்கள் என்பதற்கு கடந்த வருடம் நொவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச பெற்ற அமோக வெற்றியிலிருந்தும், இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தற்போதைய அரசுக்கு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கியதிலிருந்தும், ஐ.தே.கவுக்கு ஒரு உறுப்பினர் கூட வழங்காததிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

ஐ.தே.க. அரசு போதிய பெரும்பான்மை இல்லாத அரசாக இருந்தும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும், ஜே.வி.பியினதும் வெளிப்படையான ஆதரவுடன் பல மக்கள் விரோத, தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டது. அவ்வரசு பொதுச் சொத்துகளை தனிப்பட்ட பெரும் முதலாளிகளுக்கும், அந்நியக் கொம்பனிகளுக்கும் மலிவு விலையில் தாரை வார்த்து தேசிய பொருளாதாரத்தை அதலபாதாளத்துக்குக் கொண்டு சென்றது.

அது மாத்திரமின்றி, முன்னைய ராஜபக்ச அரசு இலங்கையை சீனாவுக்கு அடகு வைத்துவிட்டது எனப் பிரச்சாரம் செய்து பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசு, பின்னர் பொருளாதாரத் தேவைகளுக்காக அதே சீனாவின் காலடியில் விழுந்ததுடன், நாட்டின் நலனைக் கவனத்தில் கொள்ளாது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட காலக் குத்தகைக்கும் வழங்கியது.

அத்துடன், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற ஏகாதிபத்திய வட்டிக் கடைகளிடமும், அமெரிக்கா உட்பட பல மேற்கு நாடுகளிடமும் பல கோடி டொலர்கள் பணத்தை அறா வட்டிக்கு வாங்கி நாட்டைப் பெரும் கடனாளியாகவும் மாற்றியது.

இன்னொரு பக்கத்தில் நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையை ஏகாதிபத்திய சக்திகளுக்குச் சார்பாக மாற்றி, நாட்டுக்குப் பாதகமான பல ஒப்பந்தங்களைச் செய்ததுடன், மேற்கத்தைய சக்திகளுக்கு அடிபணிந்து மேற்கத்தைய சக்திகள் சர்வதேச அரங்கில் கொணடு வந்த நமது நாட்டுக்குப் பாதகமான – இறைமையையும் சுயாதீனத்தையும் பாதிக்கின்ற தீர்மானங்களுக்கு வழியமைத்துக் கொடுத்தது.

இன்னொரு பக்கத்தில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக தமிழ் மக்களுக்குப் போலியான வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டு, மறுபக்கத்தில் தமிழ் பிரிவினைவாத (புலி சார்பு) சக்திகள் வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குள் சுதந்திரமாக வந்து போகவும், தமது

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# 2020 ஆம் ஆண்டை முடக்கியுள்ள கோவிட்-19

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதகாலமும் கோவிட் –19 வைரஸ் காரணமாக முடங்கிக் கிடந்தது உலகம். மீண்டும் மெதுவாக தனது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி வருகிறதென ஆறுதலடைந்து கொண்டிருக்கையில், மறுபடியும் உலகின் பல நாடுகள் முடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொரோனா வைரஸிற்கு இதுவரையில் 216 நாடுகளில் 39 மில்லியனுக்கும் அதிகமான உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளும் 11 இலட்சம் உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இதில் கடந்த இரண்டரை மாத காலத்தில் மட்டும் 21 மில்லியன் பேர் தொற்றுக்குள்ளாகி இருப்பதாகவும் 4 இலட்சம் பேர் மரணமடைந்துள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. அதாவது தொற்றின் அதிகரிப்பு வீதம் பன்மடங்கு அதிகரித்த வண்ணமுள்ளது.

அதேவேளையில், உலகில் இதுவரையில் 29 மில்லியன் பேர் கொரோனா நோயிலிருந்து குணமாகியுள்ளனர் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியே. எனினும், அனைத்துப் பரிசோதனைகளிலும் குணமடைந்து விட்டதாகக் கூறப்பட்ட நோயாளிகளில் பலருக்கு, பின்னர் நடந்த சோதனைகளில் இந்த வைரஸ் தாக்குதல் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரங்களின்படி நாளொன்றுக்கு அண்ணளவாக 4 இலட்சம் பேருக்கு தொற்று இருப்பதாகக் கண்டு பிடிக்கப்படுவதாகவும், ஆறாயிரம் பேரளவில் மரணத்தைத் தழுவுவதாகவும் தெரிய வருகின்றது.

இலங்கையில் ஒப்பீட்டளவில் கொரோனாத் தொற்றின் தாக்கம் மிகவும் குறைவாக காணப்பட்டு வந்தது. அதற்குக் காரணம், தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளே. அண்மையில் உலக சுகாதார நிறுவனம் கோவிட் –19 இற்கான இலங்கை அரசின் எதிர்வினைக்கு தனது பாராட்டுதலையும் தெரவித்துள்ளது. எனினும் கடந்த சில வாரங்களாக கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாக இலங்கை அரசாங்கம் தெரிவிக்கின்றது.

கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை பகுதியிலுள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்றிருப்பதாக, ஒக்ரோபர் 3ந் திகதி உறுதிப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 10 நாட்களில், இரண்டாயிரம் பேர் வரையில் தொற்றுக்குள்ளாகி இருப்பதாகத் தெரிய வருகின்றது. இலங்கையில் இதுவரையில் மொத்தமாக 5200 பேருக்கு கொரோனா வைரஸ் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பலியானவர்களின் எண்ணிக்கை 13 பேர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அண்டை நாடான இந்தியாவில் தொற்றுக்கு உள்ளாகியதாக உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 73 இலட்சத்தினைத் தாண்டியும், பலியாகியானவர்களின் எண்ணிக்கை 1.1 இலட்சத்திற்கு மேற்பட்டதாகவும் உள்ளன. தொற்றாளர்கள் மற்றும் பலியானவர்களின் எண்ணிக்கைகளில் முறையே 82 இலட்சம், 2.2 இலட்சம் என, உலகில் கொரோனா பாதிப்பில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்திலும், இரண்டாமிடத்தில் இந்தியாவும் இருக்கின்றன.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட முடக்க நடவடிக்கைகளினால், உலகப் பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. நடப்பு ஆண்டில் உலகப் பொருளாதாரம் 5.2 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியடையும் என உலக வங்கி கணித்துள்ளது. உள்நாட்டுத் தேவை, வழங்கல், வர்த்தகம், நிதி என்பன கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரம் சரிவடையும்.

எப்போது பொருளாதார நெருக்கடி வரப்போகிறது என்று தெரியாமல் இருந்த நிலையில், கோவிட் –19 உலகின் பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரமாக்கியுள்ளது. அத்தியாவசிய தேவைகளைத் தவிர பிற தொழில் நடவடிக்கைகள் முற்றாக முடங்கியுள்ளன. சந்தைப் பொருளாதாரம் பிரதானமாகி, அது உலகமயமாக்கப்பட்ட பின், இதுபோன்ற நெருக்கடிகள் சர்வசாதாரணமானவை என்றே முதலாளித்துவம் கருதுகிறது. வழக்கமாக நெருக்கடி காலம் என்று வந்தாலே அதில் அரசியலும் சந்தையும் தனக்கான வாய்ப்புகளைத் தேடிக்கொண்டே இருக்கும். அதனால் அவை ஒருபோதும் நெருக்கடியால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி கவலை கொள்வதில்லை.

தொற்று நோய்களை முற்றாக ஒழிக்க முடியும், ஆனால் கோவிட் –19 என்பது விரைவில், ஏதாவது காலவரையறுக்குள் ஒழிக்கப்பட முடியாது என்றே மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வைரஸ் பரவலிற்கு எதிராக எப்படி செயற்படுவது என்பதற்கு முன்னதாக, நாங்கள் எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றியே சிந்திக்க வேண்டும். அதாவது மிகப்பாரியளவிலான தொற்று பரவுவது தவிர்க்கப்பட வேண்டும். ஒரே நேரத்தில் ஒரே பகுதியில் பலருக்கு தொற்று ஏற்படுவது என்பது விரைவான பரவலுக்கு இட்டுச்செல்லக் கூடியது என்பதே மிக மோசமாக நடக்கக் கூடியது.

ஒரு மருத்துவர் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு ஒருவர் பின் ஒருவராக வைத்தியம் பார்க்க முடியும். ஆனால் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் நோயுற்றிருக்கும் போது ஒரே மருத்துவரால் அனைவருக்கும் வைத்தியம் பார்க்க முடியாது. சுகாதாரப் பராமரிப்பு முறையின் அளவுத்திறனுக்கு அதிகமாக நோயுற்றவர்களின் எண்ணிக்கை இருக்கும் போது, பராமரிப்பு எதுவுமின்றி அதிமானோர் கைவிடப்படுவார்கள். இந்த நிலை உருவாகும் போது சிகிச்சையளிக்கப்படாமலேயே ஏராளமானோர் இறந்துவிடுவார்கள். மேலும் சுகாதார ஊழியர்களும் தொற்றுக்கு ஆளாகுவார்கள். கட்டாயமாக பராமரிப்பு தேவைப்படும் நேரத்தில், சுகாதாரப் பராமரிப்பு முறையின் அளவுத்திறன் வீழ்ச்சியடைந்து, நோயாளிகள் பராமரிப்பின்றி இறக்க நேரிடும்.

இந்தமாதிரியான வேளைகளில் கோவிட் –19 நோயாளிகளுக்கு மட்டுமல்ல, அனைத்து நோயாளிகளுக்குமான ஆபத்து, மிக அதிகமாக இருக்கும். புற்றுநோய் அல்லது இதய நோய்கள் போன்ற மரணத்திற்கான பொதுவான காரணங்களால் அவதியுறும் நோயாளிகளுக்கு வழக்கமாக கிடைக்கக்கூடிய சிகிச்சைக்காக மருத்துவர்களை அணுக முடியாமல் போகலாம். கோவிட் –19 தொற்றுக்கு ஆளாகலாம் என்ற அச்சத்தில் மருத்துவரிடம் செல்லுவதை பலபேர் தள்ளிப்போடலாம். இதனால் தங்களின் நோயை உரிய நேரத்தில் கண்டறிவதை தவற விடுகிறார்கள்.

உயிருக்கும் பொருளாதாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள இன்றைய சூழலை திட்டமிட்டு எதிர்கொள்ளவில்லை எனில் எதிர்காலம் மோசமாவதை தடுக்க முடியாது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

மக்கள் சீனக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதன் 71ஆவது ஆண்டு தினத்தையொட்டி (1949 ஒக்ரோபர 01 – 2020 ஒக்ரோபர் 01) சீனப் புரட்சியின் தளகர்த்தரான மாஓவால் எழுதப்பட்ட இக்கட்டுரை பிரசுரமாகின்றது. இக்கட்டுரையில், இரண்டாம் உலக யுத்தத்தின் எதிர்காலம் குறித்தும், பாஸிச யுத்த வெறியன் ஹிட்லரின் முடிவு எப்படியாக இருக்கும் என்பது குறித்தும், சோவியத் யூனியன் போரில் ஈட்டப்போகும் வெற்றி குறித்தும், மாஓ தீர்க்கதரிசனத்துடன் தன் ஆய்வை முன்வைத்துள்ளார்.

# இரண்டாவது உலக யுத்தத்தின் திருப்புமையம்




ஸ்டாலின்கிராட் சமர் பிரித்தானிய அமெரிக்க பத்திரிகைகளால் வேர்டன் சமருடன் ஒப்பிடப்பட்டது. "செவ்வேர்டன்" இப்பொழுது உலகப் பிரசித்தமானது. இந்த உவமை முற்றாகப் பொருத்தமானதல்ல. இன்றைய ஸ்டாலின்கிராட் சமர் முதலாவது உலக யுத்தத்து வேர்டன் சமரிலிருந்து இயல்பில் வேறுபட்டது. ஆனால், அவற்றுக்கு ஒரு ஒற்றுமை உள்ளது – முன்பு போலவே இப்போதும், ஜெர்மனியத் தாக்குதல்களில் ஏமாந்து மக்கள் பலர் ஜெர்மனியால் இன்னும் யுத்தத்தில் வெல்ல முடியும் என்று தவறாக எண்ணுகின்றனர்.

முதலாவது உலக யுத்தம் 1918ம் ஆண்டுக் குளிர்காலத்தில் முடிவடைவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன், 1916ல் ஜெர்மானியப் படைகள் பிரெஞ்சுக் கோட்டையான வேர்டன் மீது பல தாக்குதல்கள் தொடுத்தன. வேர்டன் சமரில் ஜெர்மானியப் படைகளின் தளபதியாக இருந்தவர் ஜெர்மனியின் முடிக்குரிய இளவரசர், சமர் புரிந்த படைகள் ஜெர்மனிய இராணுவத்தின் திறமைமிக்க பகுதி. இந்தச் சமர் தீர்க்கமான முக்கியத்துவம் வாய்ந்திருந்தது. கொடூரமான ஜெர்மனியத் தாக்குதல்கள் தோல்வி கண்டபின் ஜெர்மனிய – ஆஸ்திரிய – துருக்கிய – பல்கேரிய கும்பல் முழுவதற்குமே எதிர்காலமிருக்கவில்லை, அதுமுதல் அதற்குக் கஸ்டங்கள் கூடிக்கொண்டு போயின, அதுஅதன் ஆதரவாளர்களால் கைவிடப்பட்டது, அது சீரழிந்தது, ஈற்றில் வீழ்ந்தது.

ஆனால், அதே நேரத்தில் ஆங்கில – அமெரிக்க – பரெஞ்சுக் கும்பல் ஜெர்மானிய இராணுவம் மிகப்பலம் வாய்ந்ததென எண்ணி இந்த நிலைமையைக் கிரகித்துக் கொள்ளவில்லை, அத்துடன் அவை தாம் வெற்றியை அணுகிச் செல்வதையும் அறியவில்லை.

**மாஓ சேதுங்**

மனித வரலாற்றில் அழிவின் விளிம்பிலுள்ள எல்லாப் பிற்போக்குச் சக்திகளும் புரட்சிகர சக்திகளுக்கு எதிராக நிர்க்கதியான இறுதிப் போராட்டம் ஒன்றை நடத்துவது வழக்கம். ஆனால் புரட்சிவாதிகள் சிலர் தோற்றத்தளவில் பலமாகவும், உள்ளூரப் பலவீனமாகவும் இருக்கும் இந்தத் தோற்றப்பாட்டில் தற்காலிகமாக ஏமாந்து, எதிரி அழிவைக் கிட்டிவரும் வேளையில், தாம் வெற்றியை நோக்கி முன்னேறும் உண்மையைக் காணத் தவறி விடுகின்றனர்.

முழுப் பாஸிச சக்திகளின் தோற்றமும் அவை சில ஆண்டுகளாக நடத்தி வந்த ஆக்கிரமிப்பு யுத்தமும் சரியாக இத்தகைய ஒரு நிர்க்கதியான இறுதிப் போராட்டத்தையே காட்டுகின்றன.

தற்போதைய இந்த யுத்தத்தில் ஸ்டாலின்கிராட் மீதான தாக்குதல் பாஸிசத்தின் சொந்த நிர்க்கதியான இறுதிப் போராட்டத்தைக் காட்டுகிறது. இந்த வரலாற்றுத் திருப்பு மையத்திலும் உலக பாஸிச – எதிர்ப்பு முன்னணியிலுள்ளோர் பலர் பாஸிசத்தின் கொடிய தோற்றத்தால் ஏமாற்றப்பட்டு அதன் சாராம்சத்தை உய்த்துணரத் தவறிவிட்டனர். முழு ஜெர்மனியப் படையும் டொன் ஆற்றுத் திருப்பத்தைக் கடந்து ஸ்டாலின்கிராட் மீதான முற்றுமுழுதான தாக்குதலை ஆரம்பித்த ஆகஸ்ட் 23ந் தேதி முதல், ஜெர்மனிய யுனிட்டுகள் சில இந்த நகரின் வடமேல் பகுதியிலிருந்த கைத்தொழில் குறிச்சிக்குள் நுழைந்த செப்டெம்பர் 15ந் தேதி ஊடாக அந்தக் குறிச்சியில் இருந்த ஜெர்மனியச் சுற்றிவளைப்பு அணியைச் செஞ்சேனை உடைத்து விட்டதென சோவியத் தகவல் பியூறோ தெரிவித்த அக்டோபர் 9ந் தேதி வரை மொத்தம் நாற்பத்தியெட்டு நாட்களாக மனிதகுல வரலாற்றில் ஈடிணையற்ற, வரலாறு காணாத ஒரு கசப்பான போராட்டம் நடந்தது. இறுதியில் இந்தச் சமரில் சோவியத் படைகள் வெற்றி பெற்றன.

இந்த நாற்பத்தியெட்டு நாட்களில் அந்த நகரிலிருந்து வந்த ஒவ்வொரு தோல்விச் செய்தியும் வெற்றிச் செய்தியும் பல்கோடி மக்களின் இதயங்களை ஈர்த்து, அவர்களுக்கு சிலவேளை கவலையை ஏற்படுத்துவதும், சிலவேளை குதூகலத்தைத் தருவதுமாயிருந்தன. இந்தச் சமர் சோவியத் - ஜெர்மனியப் போரின் திருப்பு மையம் மாத்திரமல்ல, தற்போதைய பாஸிச – எதிப்பு உலக யுத்தத்தின் திருப்பு மையம் மாத்திரமுமல்ல, இது முழு மனிதகுல வரலாற்றினதும் திருப்புமையமாகும். இந்த நாற்பத்தியெட்டு நாட்கள் முழுவதிலும் உலக மக்கள் கடந்த அக்டோபரில் மாஸ்கோவை அவதானித்ததைவிட இன்னும் அதிக கவனத்துடன் ஸ்டாலின்கிராட்டை அவதானித்தனர்.

மேற்கு முன்னணியில் வெற்றி பெறும்வரை ஹிட்லர் எச்சரிக்கையுடன் இருந்ததாகத் தெரிகிறது. போலந்தைத் தாக்கியபோதும், நார்வேயைத் தாக்கியபோதும், ஒல்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகியவற்றைத் தாக்கியபோதும், பால்கனைத் தாக்கியபோதும் அவன் தன் முழுப் பலத்தையும் ஒரே நேரத்தில் ஒரு நோக்கத்தில் குவித்தான், தன் கவனத்தைப் பல இடங்களில் செலுத்தத்

துணியவில்லை. மேற்கு முன்னணியில் வெற்றி பெற்றபின் அவன் வெற்றி மமதை கொண்டு, சோவியத் யூனியனை மூன்று மாதங்களில் தோற்கடிக்க முயன்றான். இந்தப் பெரிய, சக்தி வாய்ந்த சோசலிச நாட்டின் மீது, வடக்கே மர்மான்ஸ்க் தொட்டு தெற்கே கிரிமியா வரை பரந்திருந்த முழு முன்னணியின் வழியாகவும் தாக்குதல் தொடுத்தான். இவ்வாறு செய்கையில் அவன் படைகளைப் பிரித்தான். கடந்த ஆண்டு அக்டோபரில் மாஸ்கோ போரியக்கத்தில் அவன் தோற்றது சோவியத் – ஜெர்மானிய யுத்தத்தின் முதலாவது கட்டத்தின் முடிவைக் காட்டியது. ஹிட்லரின் முதலாவது யுத்ததந்திரத் திட்டம் தோல்வியடைந்தது.

கடந்த ஆண்டு செஞ்சேனை ஜெர்மனியத் தாக்குதலை நிறுத்தி, குளிர்காலத்தில் எல்லா முன்னணிகளிலும் ஒரு எதிர்த் தாக்குதலை நடத்தியது. இது சோவியத் – ஜெர்மானிய யுத்தத்தின் இரண்டாவது கட்டமாக அமைந்தது. இக்கட்டத்தில் ஹிட்லர் பின்வாங்குதலுக்கும் தற்காப்புக்கும் மாறினான். இந்தக் கட்டத்தில் ஹிட்லர் தன் தலைமைத் தளபதி பிறோசிட்சைப் பதவி நீக்கம் செய்து, தானே அப்பதவியையேற்றபின், முற்றுமுழுதான தாக்குதல் திட்டத்தைக் கைவிடத் தீர்மானித்து, கிடைக்கக்கூடிய எல்லா சக்திகளையும் பெறுவதற்கு ஐரோப்பா முழுவதையும் அரித்தெடுத்து, தெற்கு முனைக்கு மட்டும் வரையறைப்பட்டதெனினும் சோவியத் யூனியனின் உயிர் நாடிகளைத் தாக்குமெனத் தான் கற்பனை செய்த ஒரு இறுதித் தாக்குதலுக்குத் தயார் செய்தான்.

அது பாஸிசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இயல்புடைய ஒரு இறுதித் தாக்குதலாய் இருந்ததால், ஹிட்லர் இயலுமானளவு மிகப் பெரும் படையை ஒன்று குவித்ததோடு, வட ஆபிரிக்கச் சமர்க்களத்திலிருந்த தனது விமானங்கள் டாங்கிகளில் ஒரு பகுதியைக்கூட இங்கு கொண்டு வந்தான். இந்த ஆண்டு மேயில் கொச்சியிலும் செவாஸ்தபோலிலும் நடந்த ஜெர்மனியத் தாக்குதலுடன் யுத்தம் மூன்றாவது கட்டத்திற்குள் பிரவேசித்தது.

ஹிட்லர் தனது ஆகாய, டாங்கிப் படைகளின் பிரதான பகுதியின் ஆதரவுடன் கூடிய 1,500,000 மேற்பட்டோரைக் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டி, ஸ்டாலின்கிராட் மீதும், காகஸஸ் மீதும் முன்பென்றுமில்லா மூர்க்கத்தனத்துடன் தாக்குதல் தொடுத்தான். அவன் வோல்காவைத் துண்டித்து, பாக்கூவைக் கைப்பற்றும் இரட்டை நோக்கத்திற்காக இவையிரண்டையும் கூடிய சீக்கிரத்தில் கைப்பற்ற முயன்றான். அத்துடன், அதையடுத்து வடக்கே மாஸ்கோவைத் தாக்கவும், தெற்கே பாரசீக வளைகுடா வரை முன்னேறவும் முயன்றான். அதே வேளையில் ஸ்டாலின்கிராடின் வீழ்ச்சிக்குப்பின் சைபீரியாவைத் தாக்கத் தயாராக மஞ்சூரியாவில் துருப்புகளைத் திரட்டுமாறு ஜப்பானியப் பாஸிஸ்ட்டுகளுக்குக் கட்டளையிட்டான்.

மேற்கு முனையில் ஒர் ஆங்கில – அமெரிக்கத் தாக்குதலைச் சமாளிப்பதற்கும் சமீப கிழக்கின் வளங்களைப் பிடிக்கவும் யப்பானியர்களுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் ஜெர்மன் சேனையின் பிரதான படைகளைச் சோவியத் யுத்த அரங்கிலிருந்து விலக்கிக் கொண்டு செல்லத் தனக்கு இயலுமாகும் அளவிற்கே சோவியத் யூனியனைப் பலவீனப்படுத்திவிடலாமென ஹிட்லர் வீண் கனவு கண்டான். அதே நேரத்தில் இது பிரதான யப்பானியப் படைகளையும் வடக்கிலிருந்து விலக்கி, பின்புறம் பந்தோபஸ்தாக இருக்க, மேற்கே சீனாவுக்கெதிராயும் தெற்கே பிரித்தானியாவிற்கும் அமெரிகாவிற்கும் எதிராக நகர்த்தப்பட இடமளிக்கும். இவ்வாறுதான் ஹிட்லர் பாஸிச முகாமிற்கு வெற்றியீட்டக் கணக்கிட்டான்.

ஆனால் இந்தக் கட்டத்தில் விசயங்கள் எப்படியாயின? ஹிட்லர் அவனது தலைவிதியைத் தீர்மானித்த சோவியத் தந்திரோபாயங்களுக்கு எதிரே வந்தான். சோவியத் யூனியன் முதலில் எதிரியை ஏமாற்றி உள்ளே ஆழமாக வரவிட்டுப் பின் ஒரு திடமான எதிர்ப்பைக் காண்பிப்பதற்கான கொள்கையைக் கைக்கொண்டது. ஐந்துமாத கால யுத்தத்தில் ஜெர்மனியப் படை காகஸஸ் எண்ணெய் வயல்களுக்குள் ஊடுருவவோ, ஸ்டாலின்கிராட்டைக் கைப்பற்றவோ செய்யவில்லை. ஆகவே, ஹிட்லர் முன்னேறவும் முடியாமல், பின்வாங்கவும் முடியாமல், உயர்ந்த மலைகளுக்கு முன்னும் தகர்க்கப்பட முடியாத நகருக்கு வெளியேயும் தனது துருப்புக்களை நிறுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான். அவன் பேரிழப்புக்களுக்குள்ளாகி, நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டான்.

அக்டோபர் வந்துவிட்டது, குளிர்காலம் நெருங்குகிறது, யுத்தத்தின் மூன்றாவது கட்டம் முடிந்து நான்காவது கட்டம் தொடங்கிவிடும். ஹிட்லரின் சோவியத் யூனியனைத் தாக்கும் யுத்ததந்திரத் திட்டமெதுவும் சரிவரவில்லை. இந்தக் காலகட்டத்தில், கடந்த ஆண்டு கோடை காலத்தில் தன் படைகளைப் பிரித்தபோது தான் பெற்ற தோல்வியை மனதிற் கொண்டு ஹிட்லர் தெற்கு முன்னணியில் தன் பலத்தை ஒன்றுகுவித்தான். ஆனால், அவன் இன்னும் ஒரே நேரத்தில் கிழக்கில் வோல்கா நதியைத் துண்டித்துத் தெற்கில் காகஸஸைக் கைப்பற்றும் இரட்டை நோக்கத்தை நிறைவேற்ற விரும்பியதால் அவன் மீண்டும் தன் படைகளைப் பிரித்தான். தன் பேராசைகளுக்குத் தன் பலம் போதாது என்று அவன் உணர்ந்து கொள்ளவில்லை.

இப்போது அவனுக்கு அழிவு கிட்டிவிட்டது – "காவுதடி இரு முனைகளிலும் கட்டப்படாவிட்டால் சுமைகள் விழுந்துவிடும்". சோவியத் யூனியனைப் பொறுத்தவரை, அது எவ்வளவுக்குப் போரிடுகிறதோ, அவ்வளவுக்குப் பலமுடையதாகிறது. ஸ்டாலினின் மதிநுட்பம் வாய்ந்த யுத்ததந்திர வழிகாட்டல் முன்முயற்சியைப் பூரணமாகப் பெற்றுள்ளதோடு, எங்கும் ஹிட்லரை அழிவை நோக்கிக் கொண்டும் செல்கிறது. இந்த குளிர்காலத்துடன் ஆரம்பமாகும் நான்காவது யுத்த கட்டம் ஹிட்லரின் நெருங்கி வரும் அழிவைக் குறிக்கும்.

முதலாவது யுத்த கட்டத்திலும் மூன்றாவது யுத்த கட்டத்திலுமுள்ள ஹிட்லரின் நிலைகளை ஒப்பிடுமிடத்து, அவன் இறுதித் தோல்வியின் நுழைவாயிலில் நிற்கிறான் என்பதை நாம் கண்டு கொள்ளலாம். ஸ்டாலின்கிராட், காகஸஸ் இரண்டிலுமே இப்போது செஞ்சேனை உண்மையில் ஜெர்மனியின் தாக்குதலை நிறுத்திவிட்டது. ஹிட்லர் இப்போது கிட்டத்தட்டக் களைப்படைந்துவிட்டான். அவன் ஸ்டாலின்கிராட், காகஸஸ் மீது தொடுத்த தாக்குதல்களில் தோல்வியடைந்துவிட்டான். கடந்த ஆண்டு டிசம்பர் முதல் இந்த ஆண்டு மே வரையான குளிர்காலம் முழுவதும் அவனால் திரட்டிச் சேர்க்க முடிந்த படைகள் ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்டுவிட்டன. ஒரு மாதத்திற்கு குறைவான காலத்தில் சோவியத் – ஜெர்மனிய முன்னணியில் குளிர்காலம் தொடங்கிவிடும். ஹிட்லர் விரைந்து தற்காப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

டொன் நதியின் மேற்குத் தெற்குப் படுக்கை முழுவதும் அவன் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரதேசம். அங்கே செஞ்சேனை எதிர்த் தாக்குதலுக்கு மாறும். இந்தக் குளிர்காலத்தில், எக்கணமும் நிகழவிருக்கும் அழிவு காரணமான பயத்தால் தூண்டப்பட்டு ஹிட்லர் தன் படைகளை மீண்டுமொருமுறை புனரொழுங்கு செய்வான். கிழக்கு மேற்கு முன்னணிகள் இரண்டிலுமுள்ள ஆபத்தைச் சமாளிக்க, அவன் ஒருவேளை தன் படைகளின் மிச்சசொச்சத்தையெல்லாம்

பொறுக்கியெடுத்து ஒன்றுசேர்த்து, அவற்றை ஆயுதபாணியாக்கி, அவற்றை ஒருசில புதிய டிவிசன்களாய் அமைக்கக்கூடியதாய் இருக்கலாம். அத்துடன், அவன் இத்தாலி, ரூமேனியா,ஹங்கேரி ஆகிய தனது மூன்று பாஸிசக் கூட்டாளிகளிடமும் உதவி கேட்டு, அவற்றிடமிருந்து இன்னும் கொஞ்சம் அதிகமான பீரங்கித் தீனிகளைப் பறித்தெடுப்பான்.

இருந்தும், அவன் கிழக்கில் குளிர்காலப் போரியக்கத்தின் இழப்புகளை எதிர்நோக்க வேண்டியும் மேற்கில் இரண்டாவது முன்னணியைச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டியும் இருக்கும். இதே வேளையில், ஹிட்லரின் அனைத்தும் முடிந்துவிட்டதைக் கண்டு நம்பிக்கையீனத்திற்குள்ளாகும் இத்தாலியும் ரூமேனியாவும் ஹங்கேரியும் மென்மேலும் அவனை விட்டகலும். சுருங்கக்கூறின், அக்டோபர் 9ந் தேதிக்குப் பின் ஹிட்லருக்கு ஒரேயொரு பாதைதான் திறந்திருக்கும், அது அழிவுப் பாதையேயன்றி வேறெதுவுமல்ல.

செஞ்சேனை இந்த நாற்பத்தியெட்டு நாட்களில் ஸ்டாலின்கிராட்டைப் பாதுகாப்பது கடந்த ஆண்டு அது மாஸ்கோவைப் பாதுகாத்ததை ஓரளவு ஒத்துள்ளது. அதாவது, ஹிட்லரின் இந்த ஆண்டுத் திட்டம் அவனது கடந்து ஆண்டுத் திட்டம் போல் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இருந்தும், வித்தியாசமென்னவென்றால், சோவியத் மக்கள் மாஸ்கோவைப் பாதுகாப்பதைத் தொடர்ந்து குளிர்காலத் தாக்குதலொன்றை நடத்திய போதிலும், இந்த ஆண்டு ஜெர்மனி தொடுத்த கோடைகாலத் தாக்குதலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதற்கு அரைவாசிக் காரணம், ஜெர்மனிக்கும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கும் அப்போதும் சிறிது திராணி மிஞ்சியிருந்ததும், அரைவாசிக் காரணம், பிரித்தானியாவும் அமெரிக்காவும் இரண்டாவது முன்னணியைத் திறந்து வைக்கத் தாமதித்ததுமாகும்.

ஆனால் இப்போது ஸ்டாலின்கிராட் பாதுகாப்புச் சமரைத் தொடர்ந்து நிலைமை கடந்த ஆண்டு நிலைமையிலிருந்து முற்றிலும் வேறுபடும். ஒருபுறம், சோவியத் யூனியன் பரந்த அளவில் இரண்டாவது குளிர்காலத் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கும். பிரித்தானியாவும் அமெரிக்காவும் (குறிப்பிட்ட தேதியை முன்கூட்டியே சொல்ல முடியாத போதிலும்) இரண்டாவது முன்னணியைத் திறந்து வைப்பதை இனிமேலும் தாமதிக்க முடியாதனவாகும். ஐரோப்பிய மக்கள் அதை வரவேற்றெழத்



தயாராவர். மறுபுறம், ஜெர்மனியும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளும் பெருமளவிலான தாக்குதல்கள் தொடுக்க இனிமேலும் ஆற்றலற்றவையாயிருக்கும். கொள்கை மாற்றம் முழுவதையும் யுத்தந்திரத் தற்காப்பாக மாற்றுவதைத் தவிர ஹிட்லருக்கு வேறுவழி இருக்காது.

ஹிட்லர் யுத்ததந்திர தற்காப்புக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டானால், பாஸிசத்தின் தலைவிதி அவ்வளவுக்கு நிர்ணயிக்கப்பட்டுவிடும். தோற்றம் பெற்ற நாள் முதல், ஹிட்லரினுடையதைப் போன்ற ஒரு பாஸிச நாடு தனது அரசியல் இராணுவ வாழ்வைத் தாக்குதலைக் கொண்டே கட்டியமைக்கிறது. ஒருகால் அதன் தாக்குதல் நினறுவிட்டால் அதன் வாழ்வுமே முடிந்துவிடுகிறது. ஸ்டாலின்கிராட் சமர் பாஸிசத்தின் தாக்குதலை நிறுத்தும். ஆகவே, அது ஒருதீர்க்கமான சமராகிறது. இது முழு உலக யுத்தத்திற்கும் தீர்க்கமானது.

ஹிட்லர் சோவியத் யூனியன், பிரித்தானியாவும் அமெரிக்காவும், ஜெர்மனி கைப்பற்றிய பிரதேசங்களிலுள்ள மக்கள் ஆகிய மூன்று பலம்வாய்ந்த எதிரிகளை எதிர்ப்பட்டுள்ளான். கிழக்கு முன்னணியில், செஞ்சேனை ஒரு கற்பாறை போல் உறுதியாக நிற்கிறது. அதன் எதிர்த் தாக்குதல் இரண்டாவது குளிர்காலம் முழுவதிலும் அதற்குப் பின்னரும் தொடரும். இதுதான் முழு யுத்தத்தினதும் விளைவையும் மனிதகுலத்தின் தலைவிதியையும் நிர்ணயிக்கப்போகும் சக்தி. மேற்கு முன்னணியில், பிரித்தானியாவும் அமெரிக்காவும் வாளா பார்த்துக் கொண்டிருப்பதும், பின்போடுவதுமான தமது கொள்கையைத் தொடர்ந்து மேற்கொண்டாலும், செத்த புலியை அடிக்கும் காலம் வரும்போது, இரண்டாவது முன்னணி திறந்து வைக்கப்படும். அத்துடன், ஜெர்மனியிலும் பிரான்சிலும், ஐரோப்பாவின் இதர பாகங்களிலும் குமுறியெழுகின்ற மக்களின் பேரெழுச்சியாகிய உள் முன்னணியும் ஹிட்லருக்கெதிராக இருக்கின்றது. சோவியத் யூனியன் ஒரு முற்றுமுழுதான எதிர்த் தாக்குதலைத் தொடுத்து, இரண்டாவது முன்னணியில் பீரங்கிகள் முழங்கும் அந்தக் கணமே அவர்கள் மூன்றாவது முன்னணியொன்றை அமைத்து அதை வரவேற்பர். இவ்வாறு, ஹிட்லர் மீது மூன்று முனையிலிருந்து தாக்குதல் வந்து குவியும் - இதுதான் ஸ்டாலின்கிராட் சமரை அடுத்து வரவிருக்கும் பெரும் வரலாற்றுப் போக்கு.

இந்நிலைமை தூரகிழக்கில் ஒரு நேரடிப் பாதிப்பொன்றை ஏற்படுத்தும். இனிவரும் ஆண்டு ஜப்பானிய பாஸிசத்திற்கும் நற்காலமாக இருக்கப் போவதில்லை. அது சவக்குழிக்குள் இறங்கும்வரை, காலம் போகப்போக அதன் தலைவலி கூடும்.

உலக நிலைமை குறித்து நம்பிக்கையற்ற கருத்துக் கொண்டிருக்கும் அனைவரும் தம் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

(இக்கட்டுரை, சீனப் புரட்சியின் தொட்டிலாக கருதப்படும் யெனானில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 10 ஆண்டுகளாக தனது தலைமைப் பீடத்தை வைத்திருந்த காலத்தில், அங்கிருந்து வெளியான "விடுதலை தினசரி" என்ற பத்திரிகைக்காக, 1942 அக்டோபர் 12ல் மாஓவால் எழுதப்பட்டதாகும்)

முதலாளித்துவம் ஒருபோதும் தானாக வீழாது. அது தள்ளி அகற்றப்பட வேண்டும். மூலதனத்திரட்சி ஒருபோதும் நின்றுவிடாது. அதனை நிறுத்த வேண்டும். முதலாளித்துவ வர்க்கம் ஒருபோதும் தனது அதிகாரத்தை விருப்பத்துடன் ஒப்படைக்காது. அதனைப் பறிக்க வேண்டும். முதலாளிகள் எங்கிருந்தாலும் முதலாளிகளைப் போலவே நடந்து கொள்கிறார்கள். சமூக விளைவுகளைப் பொருட்படுத்தாமல் சுரண்டலின் மூலம் மதிப்பு விரிவடையும் நோக்கத்தை அவர்கள் கைக்கொள்கிறார்கள். –டேவிட் ஹார்வி

# பண்டாரநாயக்க போலவே கடும்போக்கு வலதுசாரிகளால் நானும் பாதிக்கப்பட்டேன்!

– மைத்திரிபால சிறிசேன

**எஸ்.**டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க போலவே தானும் கடும்போக்கு வலதுசாரிகளால் பாதிக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார்.

பண்டாரநாயக்கவின் 61ஆவது நினைவுதின நிகழ்வில் பேசும்போதே சிறிசேன இவ்வாறு கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறுகையில்,

“எனது அரசாங்கத்தில் இருந்த கடும்போக்கு வலதுசாரிகள் என்னைச் சுட்டுப் படுகொலை செய்யவில்லையே தவிர, எனது அரசியல் அதிகாரத்தை எடுத்துச் சென்றுவிட்டனர்” என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 2015இல் தான் ஆட்சிக்கு வந்தபின் 5 வருட காலத்தில் இடதுசாரி முற்போக்கு சிந்தனையை நாட்டுக்குக் கொண்டுவரக் கூடியதாக இருந்தது எனக் கூறியுள்ளார்.

சிறிசேன இப்பொழுது தலைமைதாங்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1951ஆம் பண்டாரநாயக்கவினால் தொடங்கப்பட்ட கட்சியாகும். 1956இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்கவின் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

பண்டாரநாயக்கவின் அரசாங்கம் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் தேசியமயக் கொள்கைகளை அமுல்படுத்தியது. அதன் காரணமாக ஆத்திரமடைந்திருந்த உள்நாட்டு – வெளிநாட்டு வலதுசாரிச் சக்திகள் தல்துவே சோமராம தேரோ என்ற ஒரு பௌத்த பிக்கு மூலம் பண்டாரநாயக்கவை அவரது கொழும்பு ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் வைத்து 1959 செப்ரெம்பர் 25ஆம் திகதி சுட்டுப் படுகொலை செய்தனர்.

பண்டாரநாயக்கவுக்கு வலதுசாரிச் சக்திகள் மூலம் நடந்த கதியே தனது ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டரசாங்க காலத்தில் தனக்கும் நடந்ததாகவே சிறிசேன கருதுகிறார். இங்கு அவர் ‘கடும்போக்கு வலதுசாரி சக்திகள்’ எனக் குறிப்பிடுவது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியினரையே என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் சிறிசேனவை ஐ.தே.கவுடன் கைகோர்க்க வைத்தவரும், பண்டாரநாயக்கவின் புதல்வியுமான சந்திரிக குமாரதுங்க வலதுசாரி ஐ.தே.கவுடனேயே இன்னமும் கூடிக்குலாவி வருகிறார் என்பதுதான் வரலாற்று முரண் நகையாகும்.

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்

– மஹிந்த தேசப்பிரிய

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அரசியல்வாதிகளும் மனிதர்கள் என்று நானே கூறுகிறேன். இலங்கையில் வேறு எவரும் இதனைக் கூறி கேட்டதில்லை. அரசியல்வாதிகளும் எமது சமூகத்தில் ஓர் அங்கம். நாம் சமூகத்தைக் கறுப்பாக வைத்துக்கொண்டு, தங்கத்தால் செய்த, வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட, பாலில் நீராட்டிய அரசியல்வாதிகளைத் தேட முடியாது.

எமக்கு ஜனநாயக சமூகம் அவசியம் என்றால், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியது போல், ஜனநாயகத்தின் ஊடாக எதனையும் செய்யக் கூடிய சுதந்திரம் இருக்க வேண்டும். அப்படியான சுதந்திரம் கிடைப்பதில்லை. ஜனநாயகம் என்பது மற்றவர்களை மதிப்பது, அவர்களின் கருத்துக்கு இடமளிப்பது. இதனைத் தவிர வேறு எதுவுமில்லை.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டுமாயின் கருத்துக்களைப் பெற வேண்டும் என நான்கு இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவது குறித்து மகிழ்ச்சி. 78 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் படும் போது மக்களிடம் கருத்து கேட்கப்படவில்லை.

தற்போது, நான் 20ஆவது குறித்தோ 19ஆவது திருத்தச் சட்டம் குறித்தோ பேச போவதில்லை. நான் தற்போது ஆணைக்குழுவில் இருக்கின்றேன். சிறந்த அரசியலமைப்புச் சட்டம் கிடைக்கும் என நாங் கள் எதிர்பார்க்கின்றோம் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# *மாகாண சபை பற்றிய விவகாரத்தில் மற்றைய நாட்டுத் தலைவர்கள் தலையிட முடியாது!*

**மா**காண சபைகள் விவகாரம் ஒரு உள்நாட்டு விவகாரம். அவை பற்றித் தீர்மானிக்க இலங்கை ஜனாதிபதிக்கு மட்டுமே முடியும். மற்றைய நாட்டுத் தலைவர்கள் அதில் தலையிட அருகதையற்றவர்கள் என மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர கூறியிருக்கிறார்.

பாதுக்கவில் நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், “நாங்கள் மாகாண சபை முறைமையை தொடர வேண்டும் என இந்தியா இதில் தடையிடவோ அல்லது பயமுறுத்தவோ முடியாது” எனவும் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், எமது நாடு சுதந்திரமான சுயாதிபத்தியமுள்ள நாடு. எனவே இந்தியா எமது உள் விவகாரங்களில் தலையிட முடியாது. 13ஆவது திருத்தச் சட்டம் எமது அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்டது இந்திய – இலங்கை உடன்படிக்கை காரணமாகவே. இந்தியா பல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகக் கூறியே ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதில் ஒன்று புலிகளை இந்தியா நிராயுதபாணியக்குவதாகக் கொடுத்த வாக்குறுதியாகும். ஆனால் அது ஒருபோதும் நிகழவே இல்லை. இந்தியா அதை நிறைவேற்றவில்லை. எனவே இந்திய – இலங்கை உடன்படிக்கை என்ன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற கேள்வி எழுகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# சீனாவுக்கான புதிய நேபாள தூதுவரின் பேட்டி



**சீனா மற்றும் இந்தியாவுடனான எல்லையாக உள்ள நாடு என்ற வகையில், இரு சக்திகளுக்கு நடுவில் நேபாளம் அகப்பட்டுப் போயுள்ளதாக சில வெளிநாட்டு செய்தி ஊடகங்களால் சொல்லப்பட்டு வருகின்றது. குறிப்பாக தற்போது நிலவும் எல்லை பதட்டங்களுக்கு நடுவில், சீனாவிற்கும் இந்தியாவிற்கு இடையே ஓர் இறுக்கமாக முடிக்கப்பட்ட கயிறாக இப்போது நேபாளம் நடந்து கொள்வதாக சிலர் கூறியுள்ளனர். இந்திய செய்தி ஊடகங்களில் வெளிவந்த பல அறிக்கைகள் சீனா–நேபாள உறவுகளை களங்கப்படுத்துவதோடு, இருதரப்பு உறவுகளின் சீரான வளர்ச்சி இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றன.**

சீனாவுக்கான புதிய நேபாள தூதர் மகேந்திர பகதூர் பாண்டே (Mahendra Bahadur Pandey) இந்த கூற்றுக்களை எவ்வாறு நோக்குகிறார்? சீனா–நேபாள ஒத்துழைப்பின் வளர்ச்சியை அவர் எவ்வாறு மதிப்பீடு செய்கிறார்? நேபாள–இந்திய எல்லை பதட்டங்களின் பிந்திய நிலவரம் என்ன? ‘குளோபல் ரைம்ஸ்’ (Global Times) செய்தியாளர்கள் Xie Wenting மற்றும் Bai Yunyi இந்த விடயங்கள் தொடர்பாக தூதரை பேட்டி கண்டுள்ளனர்.

**குளோபல் ரைம்ஸ்:** சீனாவுக்கான புதிய நேபாளத் தூதுவர் என்ற வகையில் உங்களது முன்னுரிமைகள் என்ன?

**பாண்டே:** நேபாளமும் சீனாவும் அயலவர்கள் என்பதோடு நல்ல நண்களுமாவர். 1955இல் நாம் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்தோம்.

சீனாவுக்கான புதிய தூதுவர் என்ற வகையில் இரு நாடுகளுக்குமிடையிலான உடன்படிக்கையை நிறைவேற்றுவதே எனது முன்னுரிமையாகும். கடந்த வருடம் அமைந்த நேபாளத்துக்கான சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கின் (Xi Jinping) விஜயம் மிகவும் வெற்றிகரமான ஒன்றாகும். அந்த விஜயத்தின் போது 20 வரையிலான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அதேபோல நேபாள பிரதமர் கேபி சர்மா ஒலி (KP Sharma Oli) மற்றும் ஜனாதிபதி பிட்ஜா தேவி பண்டாரி (Bidhya Devi Bhandari) ஆகியோரும் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டு சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். எனவே எனது முன்னுரிமை கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளையும், மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்துவதுதான்.

கடந்த வருடம் மண்டலம் மற்றும் பாதை முன்னெடுப்பு - பி.ஆர்.ஐ (BRI – Belt and Road Initiative) இன் கீழ் சில திட்டங்களை வளர்த்தெடுத்தோம். கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் முன்னேற்றத்தை பராமரித்தல் ஆகிய திட்டங்களில் இணைந்து முன்னெடுத்துச் சென்றோம்.

**குளொபல் ரைம்ஸ்:** சில வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள், குறிப்பாக இந்தியாவைச் சேர்ந்தவை, நேபாளத்துடனான சீனாவின் அதிகரித்து வரும் உறவு பாதுகாப்பு விடயங்களின் அடிப்படையிலானது எனக் கூறுகின்றன. இதை நீங்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கிறீர்கள்?

**பாண்டே:** இது உண்மைகளின் அடிப்படையில் அல்லாத ஒருதலைப்பட்சமான போக்கு. இந்தியா காலனித்துவ நாடாக இருந்த பொழுது நேபாளம் சுதந்திரமான சுயாதிபத்தியமுள்ள நாடாக இருந்தது. நாம் எந்தவொரு தத்துவார்த்தக் குழுக்களுடனோ அல்லது எந்தவொரு வல்லரசுடனோ இணைந்திருக்கவில்லை.

இந்திய ஊடகங்கள் ஒருதலைப்பட்சமாகவோ அல்லது சிலரைத் தவறாக வழிநடத்துவதாகவோ இருக்கக்கூடும். எனவே அவை சில பொய்யான செய்திகளையும் பிரச்சாரங்களையும் வெளியிடுகின்றன. ஆனால் அவை உண்மையல்ல. சீனாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு இயற்கையானதும் நட்புறவானதுமானது.

இது ஒரு பிராந்திய அடிப்படையிலான கேள்வியல்ல. இது புரிந்துணர்வு மற்றும் ஒருவருக்கொருவர் உதவுவது சம்பந்தமான விடயம். சீனாவும் இந்தியாவும் எமது அயலவர்கள். அயலவர்கள் ஒருவர் மற்றவரைக் கண்டு பயப்படக்கூடாது. பதிலாக நாம் ஒருவரோடொருவர் கைகோர்த்து, புரிந்துணர்வை வளர்த்து, ஒத்துழைப்பை முன்னெடுத்துச் சென்று பரஸ்பர நன்மையை உருவாக்க வேண்டும்.

**குளோபல் ரைம்ஸ்:** சில மேற்கத்தைய ஊடகங்கள் நேபாளம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் கயிற்றில் நடப்பதாகவும், அது சீன – இந்திய எல்லைப் பதற்றத்தில் சிக்கியுள்ளதாகவும் கூறுகின்றன. இதுபற்றி உங்கள் கண்ணோட்டம் என்ன?

**பாண்டே:** சில வேளைகளில் இது நடக்கின்றது. சீனாவும் இந்தியாவும் இரு அயல் நாடுகள், நேபாளமும் சீனாவும் அயல் நாடுகள், நேபாளமும் இந்தியாவும் கூட அயல்நாடுகள். நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எல்லை சற்று நீண்டதாக இருப்பதுடன், சில பிரச்சினைகளும் இருக்கின்றன.

முன்பு சீனாவுடனும் எமக்குச் சில பிரச்சினைகள் இருந்தன. அப்பொழுது சீனத் தலைவராக அதிகாரத்தில் மாஓ சேதுங்கும், சீனாவின் பிரதமராக சௌ என்லாயும் இருந்த நேரத்தில் நாம் அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டோம். அந்த நேரத்தில் எல்லைப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக இரு நாடுகளும்

உடன்படிக்கை ஒன்றும் செய்து கொண்டோம். இப்பொழுது எமக்கு சீனாவுடன் எந்த எல்லைப் பிரச்சினையும் இல்லை.

இந்தியா எமது நிலம் சிலவற்றை எடுத்துள்ளது. 1962இல் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் யுத்தம் நடைபெற்று இந்தியா தோற்கடிக்கப்பட்ட நேரத்தில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த சிலர் தற்காலிகமாக எமது மண்ணில் தங்கியிருந்தனர். ஆனால் பின்னர் அவர்கள் அந்த நிலம் தங்களுடையது என உரிமை கோரினர். எனவே அதுதான் எமது பிரச்சினை. இரு தரப்பினரும் அமர்ந்து பேசி நல்ல முறையில் இந்த எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க நாம் முயற்சிக்கிறோம்.

இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு பிரச்சினையையும் தாக்குதல்களாலோ குண்டுகளாலோ தீர்க்க முடியாது. ஆனால் நாம் ஒன்றாக அமர்நது பேசி இதைத் தீர்க்க முடியும். எமக்குள்ள உலகக் கண்ணோட்டம், அறிவு, திறமை, தூரநோக்கு என்பனவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். அதன்பின் எம்மால் இதைத் தீர்க்க முடியும்.

எல்லைப் பிரச்சினை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலோ அல்லது நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலோ இருந்தாலும் அதைப் பிரச்சாரம் ஆக்கக்கூடாது. இது இரு தரப்பும் ஒன்றாக அமர்ந்திருந்து வரலாற்றுக் குறிப்புகளின் அடிப்படையிலும், உண்மைகளின் அடிப்படையிலும் பேசித் தீர்க்க வேண்டிய விடயமாகும். அதன் பின்னர் நாம் விஞ்ஞானபூர்வமான முடிவுக்கு வர முடியும். அத்துடன் அந்த முடிவை சம்பந்தப்பட்ட தரப்புகள் மதித்து நடக்க வேண்டும்.

நாம் இந்தியாவைப் பேச வரும்படி பல தடவைகள் கேட்டுக்கொண்ட போதிலும், அவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் இப்பொழுது அவர்கள் ஒன்றாக அமர்ந்திருந்து பேசுவதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

**குளோபல் ரைம்ஸ்:** சீன – நேபாள புகையிரதத் திட்டத்தின் வளர்ச்சிப் போக்குகள் என்ன? அதை நிறைவேற்றுவதற்கு காலவரையறை ஏதாவது உள்ளதா?

**பாண்டே:** இரு தரப்பும் கடுமையாக உழைக்கிறார்கள். விசேடமாக முற்கூர்வு ஆய்வு ஏற்கெனவே காத்மாண்டுவில் ஆரம்பமாகியுள்ளது. பெருந்தொற்று காரணமாக இந்த பணி தாமதமடைந்துள்ளது. பெருந்தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் இந்தப் பணி துரிதப்படுத்தப்படும். இரு தரப்பும் இந்த நாட்களில் பத்திரங்களிலான வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இந்தத் நிகழ்வை வளர்த்தெடுப்பதற்கான திட்டம் குறித்து இரு தரப்பும் தொடர்பில் இருக்கிறார்கள்.

எனது பார்வையில் இந்த புகையிரதத் திட்டத்தை பூரணப்படுத்த ஐந்து வருடங்கள் எடுக்கலாம். அதன் பின்னர் மக்கள் இதைப் பயன்படுத்த முடியும்.

**குளோபல் ரைம்ஸ்:** கடந்த மாதம் சீனா, நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்து கோவிட் – 19ஐ எதிர்த்துப் போராடுவதற்கும் மற்றும் பிராந்திய சமாதானம், பாதுகாப்பு சம்பந்தமாகவும் கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது. இந்தக் கூட்டத்தை எப்படி மதிப்பீடு செய்கிறீர்கள்?

**பாண்டே:** உலகில் 200 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் இருக்கின்றன. அவற்றின் எல்லைகள் மலைகளால் வகுக்கப்படவில்லை. மாறாக அவை செயற்கையான கோடுகள். எப்பொழுது பெருந்தொற்று ஏற்பட்டதோ, அப்பொழுது இந்தக் கோடுகள் தடை எதுவும் போடவில்லை.

எனவே எப்பொழுது இந்தப் பெருந்தொற்று வந்ததோ அப்பொழுது சீனா செய்தது போல இந்தத் தலைவர்கள் பேசி அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டியது அவர்கள் கடமையாகும்.

நான் எப்பொழுதும் சொல்வது என்னவென்றால், சீனா இந்த நோய்த் தொற்றை சுதந்திரத்துக்கு சார்பாகவும், வாழ்க்கை உரிமைக்கு சார்பாகவும் கட்டுப்படுத்தியது என்பதைத்தான். சில நாடுகள் சுதந்திர உரிமையின் நாயகர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டாலும், மனித வாழ்க்கையின் பெறுமானத்தை ஒருவராவது சுதந்திரத்தின் பெயரால் உரிமை கோர முடியாது. சுதந்திரத்தின் பெயரால் பல நூறாயிரம் மக்கள் இந்த பெருந் தொற்றால் மாண்டு போயுள்ளனர்.

சீனாவின் தலைமை மக்கள் வாழ்வின் விலைமதிக்க முடியாத தன்மைக்கு பெரும் கவனம் செலுத்தியது. அதேபோல நேபாளத்தில் எமது கரங்களை சீனாவுடன் இணைத்துக் கொண்டோம். அத்துடன் சீனா எம்மை ஆதரித்தது.

நாம் இந்த பெருந் தொற்றுக்கு எதிராக இணைந்து போரிடாவிட்டால் எம்மால் இதைக் கட்டுப்படுத்தியிருக்க முடியாது. நாம் ஒருவரையொருவர் புறக்கணித்தும், கூட்டாகப் போரிடாமலும் இருந்திருந்தால் இந்தப் பெருந்தொற்று தொடர்ந்து சென்று மனிதர்களைத் தோற்கடித்திருக்கும். அரசியல் தலைவர்கள் என்னத்தைக் கூறினாலும் மக்கள் கூட்டுச் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள்.

அரசியல் ரீதியாகக் கூறுவதானால் சில நாடுகள் ஒருதலைப்பட்சமான போக்கில் இருக்கின்றன. ஆனால் இது 21ஆம் நூற்றாண்டு. இந்தச் சகாப்தத்தில் ஒருதலைப்பட்சமான போக்கு வேலை செய்யாது. இந்தக் காலகட்டத்தில் பன்முகத் தன்மையே மக்களின் கோரிக்கையாகும்.

**குளோபல் ரைம்ஸ்:** நேபாளம் தென்மேற்கில் உள்ள சீனாவின் திபெத் சுயாட்சிப் பிராந்தியத்துடன் நீண்ட எல்லையைக் கொண்டுள்ளது. நேபாளத்துக்கும் திபெத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?

**பாண்டே:** திபெத் சீனாவின் ஒரு பகுதியாகும். திபெத்தும் நேபாளமும் தொடர்புள்ளவை. நாங்கள் இருவரும் நீண்ட எல்லையைக் கொண்டுள்ளோம். நாங்கள் ஒரு – சீனக் கொள்கையின் பக்கம் உறுதியாக நிற்கின்றோம்.

மக்காவு (Macao) அல்லது ஹொங்கொங் (Hong Kong) அல்லது தாய்வான் (Taiwan) அல்லது திபெத் (Tibet), ஒவ்வொரு பகுதியும் சீனாவே. நாம் ஒரு – சீனக் கொள்கையின் பக்கம் உறுதியாக நிற்கின்றோம்.

சிலர் திபெத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தங்கியுள்ளனர். நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கட்டுப்பாடற்ற எல்லையைத் தவறாகப் பயன்படுத்தி சில விரும்பத்தகாத நபர்கள் நேபாளத்துக்குள் நுழைகின்றனர். அவர்கள் எமது உறவுகளுக்கு எதிராக செயற்பட முனைகின்றனர். நாம் இதை அனுமதிக்காது அவர்களைக் கட்டுப்படுத்துகின்றோம். எமது மண்ணை எமது நட்பு நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது.

எல்லைப் பகுதிகளில் வசிக்கும் நேபாள மக்கள் திபெத்துக்கு வருவதும்,

திபெத் மக்கள் நேபாளத்துக்கு செல்வதும் நடைபெறுகின்றது. இன்னொரு முக்கியமான விடயம், திபெத் – நேபாள எல்லைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் ஒரே கலாச்சாரத்தையும் மொழியையும் பேணுகின்றனர். எனவே திபெத்துக்கும் நேபாளத்துக்கும் இடையே எந்தப் பிரச்சினையும் இல்லை.

வர்த்தக ரீதியில் சில நோபாள உற்பத்திகள் திபெத்துக்கு ஏற்றுமதியாகின்றன. அதேநேரத்தில் நாம் சீனப் பொருட்களை திபெத்துக்கூடாக இறக்குமதி செய்கின்றோம்.

இரு பகுதிகளுக்குமிடையே வீதிக் கட்டுமானங்கள் நடைபெறுகின்றன. இந்த வீதிக் கட்டுமானங்களும், இரு நாடுகளுக்கிடையிலான புகையிரத பாதைகளும் நிர்மாணக்கப்பட்ட பின்னர் வர்த்தக நடவடிக்கைகள் மேலும் வளர்ச்சி பெறும்.

**குளோபல் ரைம்ஸ்:** பெருந்தொற்று உலக ஒழுங்கை மாற்றியமைக்கும் எனச் சிலர் கூறுகின்றனர். இந்திய ஊடகங்களில் வரும் சில செய்திகள் சீன – நேபாள உறவுகள் சீர்கெட்டுவிடும் எனக் கூறுகின்றன. பெருந்தொற்றுக்குப் பின்னரான காலத்தில் சீன – நேபாள உறவின் வளர்ச்சி பற்றிய உங்கள் எதிர்வு கூறல் என்ன?

**பாண்டே:** சந்தேகத்துக்கு இடமின்றி பல செய்திகள், குறிப்பாக இந்தியாவிலிருந்து, நேபாளத்துக்கும் சீனாவுக்கும் இடையில் இனிமேலும் நல்ல உறவுகள் இருக்காது என அடிக்கடி வருகின்றன. இது ஒரு போலியான பிரச்சாரம். சீனாவுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருக்காமல் இருப்பதற்கு எமக்கு எந்தக் காரணமும் இல்லை.

பெருந்தொற்று முடிவுக்குப் பின்னர் உலகம் பன்முகத்தன்மையை நோக்கியும், கூட்டுத்தன்மையை நோக்கியும் முன்னேறிச் செல்லும். எனவே மிகவும் பிடிவாதக்காரர்களும் உள் நோக்கமுள்ளவர்களும் பின்தள்ளப்படுவார்கள். உலகம் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடையும் அதேவேளையில், பின்தள்ளப்பட்ட நாடுகளுக்கு முன்னணியில் உள்ள நாடுகள் உதவ வேண்டிய தேவையும் இருக்கும்.

இந்த மாற்றங்கள் நிகழ்ந்தாலும் கூட எமது பரஸ்பர உறவுகளில் அந்த மாற்றங்கள் செல்வாக்குச் செலுத்த முடியாது. நாம் வித்தியாசமான அரசியல் கலாச்சாரத்தைக் கொண்டிருந்தாலும், நாம் பல ஒற்றுமைகளைக் கொண்டவர்களாக இருக்கின்றோம்.

பி.ஆர்.ஐ சீனாவால் முன்மொழியப்பட்ட மிகவும் சிறந்த முன்னெடுப்பாகும். ஆனால் கருத்து நிலை வேறுபாடுகளால் இது விமர்சிக்கப்படுகிறது. ஆனால் அந்த விமர்சனம் வெற்றி பெறாது. ஏனெனில் விமர்சனம் விமர்சனமேதான். இது மக்களுடைய வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வராது. மக்கள் எப்பொழுதுமே தமது வாழ்க்கையை செழிப்பாகவும் சந்தோசமாகவும் வைத்திருக்கவே விரும்புவர்.

**தமிழில்: சண்**

# உலக சிறுவர் தினத்தின் அர்த்தம் என்ன?

ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனாலும் சிறுவர்களின் பாதுகாப்பின்மை குறைவதற்குப் பதிலாக மேலும் மேலும் அதிகரித்துச் செல்வதையே அவதானிக்கக் கூடிதாகவுள்ளது.

முன்பெல்லாம் சிறுவர்கள் குறிப்பாக சிறுமிகள், பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்யப்படுவது கூடுதலாக வெளியாட்களாலேயே நிகழ்த்தப்பட்டு வந்தது. தற்பொழுது அவர்களது சொந்தக் குடும்பத்தவர்களாலேயே அது நிகழ்த்தப்படுகிறது. அதுவும் கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு பெரும்பாலான குடும்பங்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதால் இந்த நிலைமை மேலும் அதிகரித்துள்ளது..

உதாரணமாக, கடந்த ஏப்ரலில் ஐ.நா. சிறுவர் நிதியமும், தேசிய சிறுவர் பாதுகாப்பு முதவரகமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையில் கொவிட் – 19 நோய் காரணமாக ஊரடங்கு அமுல் செய்யப்பட்ட காலத்தில் சிறுவர்கள் கொடுமைக்குள்ளாக்கப்பட்டது சம்பந்தமாக 1929 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளன. குறிப்பாக இவ்வருடம் மார்ச் 16 முதல் ஏப்ரல் 07 வரையான மூன்று வார காலத்தில் சிறுவர் மீதான கொமைப்படுத்தல்கள் 10 வீதத்திலிருந்து 40 வீதமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, சிறுவர் துஸ்பிரயோகங்கள் சம்பந்தமாக இதுவரை செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் 53 வீதமானவை (42,073 முறைப்பாடுகள்) தீர்க்கப்படாமல் உள்ளன.

சிறுவர் மீதான துஸ்பிரயோகத்தைத் தடுத்து நிறுத்துமாறு அரசாங்கத்திடம் கோரி 13,823 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிறுவர் மீதான துன்புறுத்தல்களை முடிவுக்குக் கொண்டுவரக் கோரி, 50,000 பேருடன் சமூக வலைத்தளத்தில் உருவாக்கப்பட்டுள்ள குழுவொன்று ஒக்ரோபர் முதலாம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

எனவே, பல சமூக அக்கறையாளர்களின் கருத்து யாதெனில், ஒக்ரோபர் முதலாம் திகதி சம்பிரதாயபூர்வமாக சிறுவர்களைக் கொண்டாடும் தினம் அல்ல, மாறாக அது அவர்களது பாதுகாப்பையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கான தினமாகும்.


தகவல் ஆதாரம்: களனி குமாரசிங்க

# வருடம் 06 கோடி ரூபா நஸ்டத்தில் தபால் இலாகா!

உலகில் முதல் முதலாக தபால் சேவையை ஆரம்பித்த நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் தபால் விநியோகம் நடைபெற்று வந்துள்ளது. ஒரு காலகட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் காலை நேரத் தபால் விநியோகத்துடன் மாலை நேரத் தபால் விநியோகம் கூட நடைபெற்றுள்ளது.

அத்தகைய மகிமையைக் கொண்ட தபால் இலாகா இப்பெழுது வருடந்தோறும் 06 பில்லியன் ரூபா நஸ்டத்தில் இயங்குவதாக கவலையான செய்தி வந்திருக்கிறது. இதுபற்றி அண்மையில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, தபால் சேவையைப் புனரமைப்பதன் மூலம் அது தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்க முடியும் எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதை அடைவதற்கு தபால் சேவையின் பரந்த வளங்களைப் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# தேசிய நலன், எங்களது உச்சக்கட்ட முன்னுரிமை - டியு குணசேகர



கடந்த மாதம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்த மூத்த இடதுசாரி டியு குணசேகர (D.E.W. Gunasekera), இடதுசாரி இயக்கத்துடன் நீண்ட காலச்சேவையைக் கொண்டிருந்தவர். 1958 இல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1972ல் மத்திய குழுவில் நுழைந்தார். 2004ல் பொதுச் செயலாளராக ஆனார்.

இந்த நேர்காணலில், பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகுவதற்கான அவரது காரணங்கள், கோவிட்-19 இனாலும் புதிய தாராளவாதத்தினாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்கள், சீன–இலங்கை உறவுகள் மற்றும் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டுக் கொள்கைக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்புகள் ஆகியவை குறித்து குணசேகர கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

**கேள்வி:** இராஜினாமா செய்யவதற்கு உங்களை நிர்ப்பந்தித்தது எது?

**பதில்:** எமது நாட்டில் ஒரு புதிய வளர்ச்சிக்கான காலகட்டத்தில் நாங்கள் நுழைந்து கொண்டிருக்கிறோம். கோவிட்-19 இற்குப் பின்னைய காலகட்டத்தில், உலகளாவிய, பிராந்திய மற்றும் தேசிய அளவில் பல மாற்றங்கள் இருக்கும். சீன அதிபர் ஜி ஜின்பிங் (Xi Jinping) சமீபத்தில் 'கொந்தளிப்பான மாற்றம்' (turbulent change) என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

புதிய ஜனாதிபதி, புதிய அரசாங்கம், புதிய பாராளுமன்றம் ஆகியவை உள்ளன. நெருக்கடியிலிருக்கும் புதிய தாராளவாதத்தின் இறுதிக்குள் நாங்கள் வருகிறோம். சகல அரசியல் கட்சிகளும் இப்போது ஒரு புதிய பொருளாதார மூலோபாயத்தை கண்டுபிடிக்க முயற்சிக்கின்றன.

இந்தப் புதிய முன்னேற்றங்களை இடதுசாரி இயக்கம் மதிப்பீடு செய்ய வேண்டும். நமது நாட்டில் இடதுசாரி இயக்கத்திற்கு புதிய சிந்தனைகளும் புதிய வளர்ச்சிகளும் தேவையாக உள்ளது. எனவே, ஒரு புதிய தலைமுறையிடம் தலைமை செல்ல வேண்டும்.

நான் இலங்கையில் இடதுசாரித் தலைவர்களது மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவன். அடுத்த பொதுச் செயலாளர் பதவிக்கு, அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் மிகவும் பொருத்தமான நபராக கலாநிதி ஜி. வீரசிங்கே (Dr. G. Weerasinghe) உள்ளாரென நான் மத்திய குழுவிற்கு முன்மொழிந்தேன். அவர் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

உண்மையில், நான் அரசியலை விட்டு விலகவில்லை. நான் மத்திய குழுவிலும் பொலிட்பீரோவிலும் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கிறேன். ஆனால் இப்போது கலாநிதி வீரசிங்கே புதிய சிந்தனை, செயற்பாடு மற்றும் திட்டமிடல் மூலம் முன்முயற்சி எடுக்க உள்ளார். அவர் இடதுசாரித் தலைவர்களது நான்காம் தலைமுறையைச் சேர்ந்தவர்.

**கேள்வி:** இலங்கையில் நிகழும் மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த மாற்றங்கள் பற்றிய உங்கள் பகுப்பாய்வு என்ன?

**பதில்:** நாங்கள் ஒரு பொருளாதார நெருக்கடியின் ஊடே சென்று கொண்டிருக்கிறோம். கோவிட்-19 என்பது இதன் ஓர் அம்சம், அத்துடன் உடனடிக் காரணமும் ஆகும். ஆனால், நவீன தாராளவாத பொருளாதார செயற்திட்டமே இதனை பின்னணியிலிருந்து இயக்கும் காரணம் ஆகும். இலங்கையில் நவதாராளவாதம் 40 வருடங்களாப் பயணித்து ஒரு நெருக்கடியொன்றுக்குள் சென்றுவிட்ட ஒரு புள்ளிக்கு நாங்கள் வந்தடைந்துள்ளோம்.

புதிய தாராளமயத்தை அறிமுகப்படுத்திய தரப்பு இன்று முற்றிலம் சிதைந்து பிளவுண்டுள்ளது. ஏகாதிபத்திய ஆதரவுத் தலைவருக்கு பாராளுமன்றத்தில் இடம் கிடைக்கவில்லை. இது ஓர் எதிர்பாராத, ஆனால் தவிர்க்க முடியாத புதிய தாராளவாத நெருக்கடியின் விளைவாகும்.

இதனால்தான் கோத்தபாய ராஜபக்சவுக்கு இவ்வளவு பெரிய ஆணை கிடைத்துள்ளது. பொதுவாக, எமது தேர்தல் முறையின் கீழ், மூன்றில் இரண்டு பங்கு ஆணை என்பது வெறுமனே சாத்தியமற்றது. அரசியலமைப்பு நிபுணர்கள் இதனை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. எந்தவொரு கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதைத் தடுப்பதற்காகவே 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை அவர்கள் வகுத்தனர்.

பொருளாதாரத்தைப் புத்துயிர் பெறச் செய்வதும், மீட்டெடுப்பதுமே உடனடிப் பணியாகும். 2015 இல், எங்கள் பொருளாதார வளர்ச்சி வீதம் சுமார் 5% ஆக இருந்தது, ஆனால் இன்று அது 2% இற்கும் குறைவாக உள்ளது. இது கோவிட்-19 இற்குப் பிறகு மிகவும் மோசமாக உள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில், உண்மையில் வளர்ச்சி வீதத்தை நாங்கள் குறைந்தது 5% இற்காவது திரும்ப கொண்டுவர வேண்டும்.

55 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனையும் 15 டிரில்லியன் இலங்கை ரூபாய் உள்நாட்டுக் கடனையும் கொண்டவர்களாக நாங்கள் இருக்கிறோம். எங்களுக்கு பெரியதொரு வருவாய் பற்றாக்குறை உள்ளது. ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. எங்களிடம் ரூபாய்கள் இல்லை,

டொலர்கள் இல்லை, மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் (Foreign Direct Investment - FDI) வருவது இல்லை. உலகம் நெருக்கடியில் உள்ளதோடு கடன் கொடுக்கவும் யாரும் இல்லை.

குறைந்தபட்சம் சில உதவிகளை வழங்கக்கூடிய ஒரேயொரு நாடு சீனா மட்டுமே. இதுதான் யதார்த்தம்.

**கேள்வி:** ஆனால், சீனா அதன் சொந்த பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறதல்லவா?

**பதில்:** நிச்சயமாக, இந்த பொருளாதார மந்த நிலை சீனாவையும் பாதித்துள்ளது. ஏனென்றால் அவர்கள் உலகப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியினராக உள்ளனர். ஆனால் வர்த்தகம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கையில், உள்நாட்டு நகர்விற்கு பண்டங்களையும் சேவைகளையும் திசை திருப்பும் தொலைநோக்குப் பார்வை அவர்களுக்கு இருந்தது.

சீனப் பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்புமுறைக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளின் அமைப்பு முறைகளுக்கும் இடையிலான வேறுபாடு இதுவேயாகும். அனைத்து குறைபாடுகளையும் மீறி, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் (Communist Party of China - CPC) மதிநுட்பத்தால். உள்ளக சரிக்கட்டல்களை சீனா விரைவாகச் செய்தது,

**கேள்வி:** சீன கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி பேசுகையில், சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதில் உங்கள் கட்சியின் பங்கு என்ன?

**பதில்:** சோசலிஸ நாடுகளுடனான உறவுகளை நிறுவுவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (CPSL) மட்டுமே போராடி வந்தது.

1945 இல் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தொடக்க விழாவிற்காக பாரிஸிற்கு எங்களது ஸ்தாபகர் கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க (Dr.S.A.Wickramasinghe) சென்ற போது, சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் அவர் தொடர்பில் இருந்திருக்கிறார். அந்த நேரத்தில் சீனத் தலைவர்களான சூ என் லாய் (Zhou En Lai) மற்றும் டெங் சியாவோபிங் (Deng Xiaoping) ஆகியோர் இளைஞர்களாக பிரான்சில் படித்துக் கொண்டிருந்தனர்.

இரப்பர்-அரிசி உடன்படிக்கையே சீனாவுடனான எமது முதலாவது வர்த்தக உடன்படிக்கை. சீனாவுடனான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், இரப்பரின் விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்ததினாலும், உலகில் அரிசிப் பற்றாக்குறை இருந்ததினாலும், பீட்டர் கெனமன் (Pieter Keunemen) மற்றும் கலாநிதி விக்கிரமசிங்கவின் அழுத்தத்தின் விளைவாகவாகவுமே இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆதரவு ஐக்கிய தேசியக்கட்சி கம்யூனிச சீனாவுடன் ஒரு உடன்பாட்டிற்கு வர வரலாற்று நிலைமைகளால் நிர்பந்திக்கப்பட்டது. தோழர் பீட்டர் கெனமன் தான் பின்னர், சீனாவிற்கான அரசாங்கத்தின் முதல் அனைத்துக் கட்சி தூதுக்குழுவை ஏற்பாடு செய்திருந்தார்.

**கேள்வி:** நீங்கள் எப்போதாவது சீனாவிற்கு விஜயம் செய்திருக்கிறீர்களா?

**பதில்:** நான் சீனாவிற்கு சுமார் நான்கு அல்லது ஐந்து தடவைகள் விஜயம் சென்றிருக்கிறேன். 1978 இல் டெங் சியாவோபிங் சீர்திருத்தங்களையும் திறந்த பொருளாதாரக் கொள்கையையும் தொடங்கியபோது, ஷென்செனில் (Shenzhen) உள்ள தற்போதைய சுதந்திர-வர்த்தக வலயப் (free-trade zone) பகுதிக்கு முதன்முதலில் விஜயம் செய்தவர்களில் ஒன்றாக, எங்கள் கட்சி பிரதிநிதிகள் குழு இருந்தார்கள். அந்த நேரத்தில் ஷென்செனில் அடிக்கட்டுமான வசதிகள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

1987 இல் தோழர் பீட்டர் கெனமன் தலைமையில் கட்சியின் தூதுக்குழுவொன்று சீனாவுக்குச் சென்றிருந்தது. நாங்கள் அங்கே தங்கியிருந்த வேளையில், ஒரு நாள் மாலை, பொதுச் செயலாளர் ஹூ யாவோபாங் (Hu Yaobang) எங்கள் பொலிட்பீரோவின் மூன்று பிரதிநிதிகளை அவரது தனிப்பட்ட இல்லத்தில் சந்திக்க விரும்புவதாக எங்களுக்கு ஒரு செய்தி கிடைத்தது.

நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள், இரவு 8 மணியிலிருந்து காலை 2 மணி வரை நாங்கள் கலந்துரையாடினோம். அந்த நேரத்தில்தான் சோவியத் யூனியனில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. கோர்பசேவ் (Gorbachev) அதிகாரத்திற்கு வந்திருந்தார். அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தான் அவர் சீனாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

தோழர் ஹூ யாவோபாங் எங்களிடம் கூறினார், "நான் கோர்பச்சேவைச் சந்தித்து அரசியல் சீர்திருத்தங்களில் கவனமாக இருக்குமாறு அவரை எச்சரித்தேன். உங்களது பொருளாதார சீர்திருத்தங்களை நீங்கள் செய்யலாம், ஆனால் நீங்கள் அரசியல் மாற்றங்களை செய்தால், கட்சியின் அரசியல் அதிகாரத்தை நீங்கள் இழப்பதுடன், அதுதான் முடிவாகவும் இருக்கும்"

பொருளாதார மாற்றங்கள் முற்றுப்பெறும் வரை கட்சியையும், அரசு கட்டமைப்பையும் குலைக்க வேண்டாமென சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினர் எச்சரித்திருந்தார்கள். கோர்பசேவ் இந்த எச்சரிக்கையைப் புறக்கணித்தார். சோவியத் ஒன்றியம் தகர்ந்தது. 1989 இல் பெர்லின் (Berlin) சுவர் வீழ்ந்ததோடு, இந்தப்போக்கு 1991 வரை நீடித்தது.

**கேள்வி:** சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சீர்திருத்தம் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கை சரியானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்:** சீர்திருத்தம் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டபோது, சோவியத் ஒன்றியத்தில் நெருக்கடியொன்று உருவாகி வந்தது. அது ஒரு மூடிய பொருளாதாரம். அவர்கள் உற்பத்தி செய்தவைக்கு போட்டிச் சந்தையோ அல்லது கேள்வியோ இருக்கவில்லை. இந்த அனுபவங்களிலிருந்தே சீன கம்யூனிஸ்டுகள் கற்றுக்கொண்டார்கள்.

சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்த போது டெங் சியாவோபிங் கூறினார், "பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதில் சோசலிச நாடுகள், வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் அனுபவங்களை எடுத்துக் கொண்டு, நாட்டிற்கான எமது சொந்த வேலைத்திட்டத்தை நாம் கட்டாயமாகத் தயாரிக்க வேண்டும்"

லெனின், அவர் இறப்பதற்கு முன்பு எழுதிய கடைசி கட்டுரையில், குறிப்பாக சீனப் புரட்சி நடந்தால் மட்டுமே சோவியத் ஒன்றியத்தில் சோசலிசம் பாதுகாக்கப்பட முடியும் என்று கூறியிருக்கிறார். அவரது நோக்கத்தை

நீங்கள் விளங்கிக் கொள்ளும் போது, இது எளிதாக இருக்கும்.

சீனப் புரட்சி நடந்து, அதன் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றால், மிகப் பெரிய சந்தை திறக்கப்படும். அந்த பெரிய சந்தை தான் தீர்மானிக்கும் காரணியாகும். பெரியதொரு சந்தை இல்லாமல், ஒரு சிறிய மூடிய பொருளாதாரம் இருக்கவும் முடியாது, முதலாளித்துவ சுற்றிவளைப்புடன் போட்டியிடவும் முடியாது.

இரண்டு உலக யுத்தங்கள் சந்தைகளைப் பிரிப்பதற்காகப் போரிட்டன. அணுச் சரிசமநிலைக்குப் பிறகு, மற்றுமொரு உலகப் போர் என்பது உலகை அழித்தொழிக்கும். அதனால்தான் கம்யூனிஸ்ட் இயக்கம் சமாதான சகவாழ்வுக் (peaceful coexistence) கோட்பாட்டினை எடுத்துக் கொண்டது. அது சூ என் லாய் என்பவரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

அதனால்தான் சீனா தனது பொருளாதாரத்தை திறந்து விட்டும், உலகத்துடன் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்தும், பிற சித்தாந்தங்களையும் மதிக்கின்றது. கோட்பாடுகள் உள்ளன, ஆனால் நடைமுறையில் நீங்கள் பல்வேறு தடைகளைக் கடந்து வருகிறீர்கள்.

**கேள்வி:** அமெரிக்க-சீன வர்த்தகப்போர் மற்றும் சீனாவைத் துண்டித்துக் கொள்வதென்ற ட்ரம்ப் நிர்வாகத்தின் பேச்சு பற்றிய உங்கள் பகுப்பாய்வு என்ன?

**பதில்:** துண்டிப்பது என்பது நடைமுறையில் சாத்தியமற்றது. இன்று, எங்களது உலகம் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளது, ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது மேலும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது. புதிய சூத்திரங்கள் தேடப்பட வேண்டும். ட்ரம்பின் பேச்சு அரசியல் ரீதியான ஏமாற்று வித்தைகள். நவம்பர் மாதத் தேர்தலுக்கு பின்னரே உண்மை நிலை வெளிவரும்.

ஏகாதிபத்தியம் அரசியல் மற்றும் பொருளாதார முனையில் பலவீனமடைந்துள்ளதே வர்த்தகப் போருக்கான எளிய காரணம். தொழில்நுட்ப ரீதியாக 5G (5வது தலைமுறை வலை அமைப்பு) இல் அமெரிக்காவை சீனா நெருங்கி விட்டது. ஐரோப்பிய ஒன்றியம் 'பிரெக்ஸிட்'



(BREXIT) உடன் நிலைகுலையத் தொடங்கியுள்ளது. இராணுவ ரீதியாக, ரஷ்யா மற்றும் சீனாவின் மூலோபாய கூட்டணியை ஏகாதிபத்தியம் எதிர்கொள்கின்றது.

ஏகாதிபத்தியம் தெரிவு செய்வதற்கு மூன்று தேர்வுகள் உள்ளன: போட்டி போடுதல், ஒத்துழைத்தல், அல்லது மோதுதல். அவர்கள் சீனாவுடன் போட்டிபோட முடியாது. அவர்கள் சீனாவுடன் ஒத்துழைத்தால், நீண்டகால அடிப்படையில், அவர்கள் தோல்வியைத் தழுவுவார்கள் என அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள் சீனாவுடன் மோதவும் முடியாது. அவர்கள் செய்யக் கூடியதெல்லாம், பிராந்திய ரீதியாக பதட்டங்களை உருவாக்கலாம்.

இந்த நிலைமை வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வகையில் உள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு வழக்கமான அரசியல் தீர்வாக இருந்து வந்த யுத்தத்திற்கு, ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு செல்ல முடியாதுள்ளது. இன்று நாங்கள் பலதுருவ உலகொன்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அமெரிக்கா ஒற்றைத் துருவத்தின் கீழ் ஒளிர்ந்து வந்துள்ளது.

**கேள்வி:** நவம்பரில் அமெரிக்க தேர்தல் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள். உங்களுக்கு விருப்பமான வேட்பாளர் ஒருவர் இருக்கிறாரா?

**பதில்:** நவம்பர் மாதத்திற்குப் பிறகு யார் வந்தாலும், யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஜோ பைடனின் (Joe Biden) கீழ் பெரிய மாற்றங்களை நான் எதிர்பார்க்கவில்லை. சில அம்சங்களில், ட்ரம்ப் இன்னும் சாதகமாகவே இருக்கிறார். அவர் மட்டுமே, அமெரிக்காவில் யுத்தத்தைப் பிரகடனம் செய்யாத ஒரேயொரு ஜனாதிபதி. அவர் உரத்துக் கத்துவதை மட்டுமே செய்கிறார். ஏனைய வேட்பாளர்கள் உரத்துக் கத்தவில்லை, ஆனால் போருக்கு செல்லலாம்.

**கேள்வி:** தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை என்னவாக இருக்க வேண்டும்?

**பதில்:** ஆசிய பிராந்தியத்தை இலங்கை தீவிரமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று உலகப் பொருளாதாரத்தின் முன்னணிப்படை (vanguard) ஆசியப் பொருளாதாரமாகும். உலகத்தின் கவனம் ஆசியப் பொருளாதாரத்தின் மீது குவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அபிவிருத்திகளின் பின்னணியில் இலங்கை அணிசேரா, சரிசமநிலையில் உள்ள கொள்கையை பின்பற்ற வேண்டும். இதனை 'இயக்கவியல் நடுநிலைவாதம்' (dynamic neutralism) என்று அழைக்கலாம். சித்தாந்தங்கள் எதுவாக இருந்தாலும், அனைத்து நாடுகளுடனும் நட்பாக இருப்போம். ஆனால் முதலாவது முன்னுரிமை தேசிய நலன் தான்.

அயல்நாடு என்ற வகையில் இந்தியாவுடன் இணைந்து செயல்பட வேண்டும். சீனா ஒரு நண்பர், இந்தியா ஓர் உறவினர். ஆனால் நாளாந்த வாழ்க்கையில் சில நேரங்களில் உறவுகளை விட நண்பர்கள் நெருக்கமாக இருக்கிறார்கள். சில நேரங்களில், உறவுகளை விட நண்பர்களையே நாங்கள் சார்ந்திருக்கிறோம்.

**கேள்வி:** சுதந்திரம் மற்றும் சோசலிசத்தை அடைவது என்ற இரண்டு முக்கிய குறிக்கோள்களுடன் 77 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. இதுவரையிலான உங்கள் அரசியல் செயற்பாடுகளை எப்படி மதிப்பிடுவீர்கள்?

**பதில்:** கம்யூனிஸ்ட் கட்சியின் தொலைநோக்குகள் நீண்ட காலத்திற்குரியனவாக இருக்கின்றன. சோசலிச மாற்றங்களைக் காண மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஒரு போதும் வாழ்ந்ததில்லை. அவர்கள் கருத்தாங்களையும் கோட்பாடுகளையும் மட்டுமே முன்னோடியாக வழங்கினார்கள். கம்யூனிஸ்ட் இயக்கம் என்பது சமூகத்தின் நீண்ட கால

வளர்ச்சிக்கானது.

நாங்கள் சுதந்திரம் அடைந்தோம். முழு விடுதலைக்காக அழைப்பு விடுத்த ஒரேயொரு இயக்கம் இடதுசாரிகள் மட்டுமே. 1948 இல், எங்களுக்கு அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் கிடைத்தன. நாங்கள் பொதுநலவாயத்தின் ஒரு பகுதியாகவும் நாட்டின் தலைவராக இராணி எலிசபெத்தும் இருந்தபடியால், முழுமையான விடுதலை கிடைக்கவில்லை.

1970 இல் முதல் தடவையாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தில் நுழைந்தது. அதன் பின்னரே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதோடு பிரித்தானியா முடியாட்சிடமிருந்து எங்களை அப்புறப்படுத்தினோம். 1972 இல் எங்கள் நாட்டுச் சொந்தத் தலைவருடன் நாங்கள் குடியரசு ஆனோம். ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணிகளில் சிலவற்றை நாங்கள் பூர்த்தி செய்தோம்.

பின்னர், நாங்கள் சமூக வளர்ச்சியை அடைந்தோம். இலவசக் கல்வி மற்றும் இலவச மருத்துவ சேவைக்காக நாங்கள் போராடினோம். இடதுசாரிகள் அரசாங்கத்தில் நுழைந்த பின்னர், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், நிலச் சீர்திருத்தங்கள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் வங்கிகளை தேசியமயமாக்குதல் ஆகிய அனைத்து புரட்சிகரமான சீர்திருத்தங்களும் அமுல்படுத்தப்பட்டன. நாங்கள் சோசலிசத்தை அடையாமல் விட்டிருக்கலாம், ஆனால் உலக அபிவிருத்தியின் பின்னணியில் இந்தக் கேள்விக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

(இந்தப் பேட்டி இலங்கையிலிருந்து வெளியாகும் 'சண்டே ஒப்சேவர்' (Sunday Observer) பத்திரிகையில் 20.09.2020 அன்று வெளியானது)

**பேட்டி கண்டவர்: ஷிரான் இலன்பெருமா (Shiran Illanperuma)**

**தமிழில்: வானவில்**

# சீனாவின் செழிப்பான – விசாலமான சந்தை மீது இலங்கை இலக்கு வைக்க வேண்டும்!

**– டாக்டர் பாலித கோகொனா**

சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிப் பொருட்கள் தரமானவையாக இருக்க வேண்டும் என, சீனாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் டாக்டர் பாலித கோகொனா கூறியிருக்கிறார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையிடம் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அவர் அப்பத்திரிகையிடம் மேலும் கூறுகையில்,

சீனாவுக்கும் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யும் இலங்கைப் பொருட்களின் தரத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் பரஸ்பர மற்றும் பல்துறை வர்த்தகம் வளர்ச்சி அடையும்.

சீனாவுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதில் இலங்கையின் புதிய அரசாங்கம் முன்னுரிமை கொடுத்துள்ளது. இது புதிய விடயமல்ல என்றாலும் குறிப்பிட்டளவு புதியனவும் வெற்றிகரமானவையும் உள்ளடங்கியுள்ளன.

2019 இல் 229 மில்லியன் டொலர்கள் பெறுமதியான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள், ஆடைகள், தாதுப் பொருட்கள் உட்பட்ட பொருட்களை இலங்கை சீனாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. அதே நேரம் சீனாவிலிருந்து 4 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துள்ளது.

சீனா ஒரு செழிப்புமிக்க, பெரும் சந்தை வாய்ப்புள்ள நாடு என்பதால், இலங்கை எல்லாவிதமான வாய்ப்புகளையும் பயன்படுத்தி அந்த நாட்டுடன் வர்த்தகத்தை வளர்க்க வேண்டும். தேயிலையை மட்டுமின்றி, கறுவா, மிளகு மற்றும் வாசனைத் திரவியங்களையும், இயற்கை இறப்பர் ரயர்கள், மெத்தைகள் என்பனவற்றையும் சீனச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். இலங்கையின் தரமான ஆடை உற்பத்திகளுக்கு சீனாவில் நல்ல சந்தை வாய்ப்புள்ளது.

இரத்தினக் கற்களையும் மறந்து விடாதீர்கள். இன்று உலகில் ஆகக் கூடுதலாக இரத்தினக் கற்களை வாங்குபவர்களாக சீனர்களே இருக்கின்றனர்.

1950களுக்கு சீன-இலங்கை உறவுகளை பின்னோக்கிப் பார்த்தாலும் கூட, சீனாவின் வளரும் பொருளாதாரத்தில் இருந்து இலங்கை இன்னமும் அதிக பயனைப் பெறவில்லை.

நாம் சீனாவின் பெரும் நகரங்களான பெய்ஜிங், ஸாங்காய், சென்ஸென், ரியான்ஸின் போன்றவற்றில் இலங்கைப் பொருட்கள் பற்றிய பிம்பத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். தரமான பொருட்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் உலகின் இரண்டாவது பொருளாதார சக்தியின் கவனத்தை ஈர்க்க முடியும்.

எடுத்துக்காட்டாக, உண்மையில் ஒப்பீட்டளவில் இலங்கைத் தேயிலை மலிவானது. ஆனால், சீனர்கள் தொடர்ந்தும் மலிவான தேயிலையை நாடுபவர்களாக இல்லை. அவர்கள் தரமான, நன்கு பொதி செய்யப்பட்ட, விலையுயர்ந்த தேயிலையையே விரும்புகிறார்கள். எனவே நாம் அந்தத் திசையில் பயணக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் பாலித கோகொனா கூறியிருக்கிறார்.

இதேவேளை, சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் சம்பந்தமான நிபுணரான கோகொனா பிரேரிக்கப்பட்டுள்ள சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைச் சாத்தியம் குறித்து தற்பொழுது ஆராய்ந்து வருவதால் அது குறித்து கருத்து ஏதும் கூற மறுத்துவிட்டார்.

---

அமேசனில் பற்றியெரிந்து கொண்டிருப்பது வெறும் காட்டுத்தீ அல்ல, அது ஏகாதிபத்தியத்தின் இலாபத்தீ. அதனை புரிந்து கொள்ளாவிட்டால், தீயை அணைப்பதற்கான வழி தெரியாமலே வெளிப்பட்டுவிடும்.

– எடுவார்டோ கலியானோ (Eduardo Galeano)

**முன்பக்கத் தொடர்ச்சி...**

நாசகார வேலைகளைத் திரும்பவும் ஆரம்பிக்கவும் வழி சமைத்துக் கொடுத்தது.

அது மாத்திரமின்றி, சில முஸ்லீம் அரசியல் கட்சிகளுக்கு அரசில் உயர் பதவிகளையும், சலுகைகளையும் வழங்கிக் கொண்டு, சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதிகள் அவர்களின் உதவியுடன் நாட்டுக்குள் பயங்கரவாத இயக்கங்களை கட்டி வளர்த்து “ஈஸ்டர் தாக்குதல்” போன்ற பயங்கரவாதச் செயல்களை அரங்கேற்றுவதற்கு ஐ.தே.க. அரசு ஒத்துழைப்பாக இருந்துள்ளது.

தற்போதைய அரசு பதவிக்கு வந்த பொழுது ஐ.தே.க. செய்த இத்தகைய சீரழிவுகளுடனேயே நாட்டைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. இத்தகைய சீரழிவுகளை நிவர்த்தி செய்ய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும், அவரது சகோதரர் பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசும் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டாலும், அடிப்படையில் நாட்டைப் பொருளாதார ரீதியில் அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கக்கூடிய வகையில் சரியான திட்டங்களைத் தீட்டிச் செயல்படாத வரையில் தற்போதைய அரசும் முன்னேறிச் செல்வது சாத்தியமற்றதே. இத்தகைய ஒரு நிலைமையில், கொரோனா என்ற கொடிய நோயின் தாக்கம் ஏற்பட்டு நாட்டைப் பல வழிகளிலும் பாதிப்படைய வைத்துள்ளது. ஒரு காலத்தில் பெரும் தோட்ட உற்பத்திகளான தேயிலை, இறப்பர், கோப்பி, கொக்கோ போன்றவற்றையும் தெங்கு உற்பத்திகளையும் அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கு நம்பியிருந்த இலங்கைப் பொருளாதாரம், 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக வேறு துறைகளுக்கு மாறியது.

77இற்குப் பின்னர் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட வேலை வாய்ப்புகள் மூலமும், சுதந்திர வர்த்தக நிலையங்களில் உருவான ஆடைத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததின் மூலமும் ஓரளவு அந்நியச் செலாவணியை இலங்கை ஈட்டத் தொடங்கியது. அத்துடன், ஜே.ஆர். அரசாங்கம் தொடங்கிய உள்நாட்டு யுத்தம் காரணமாக பல தமிழர்கள் மேற்கு நாடுகளுக்குச் சென்று அகதி அந்தஸ்துப் பெற்றதால் அவர்கள் இலங்கையிலிருந்த தமது குடும்பத்தவர்களுக்கு அனுப்பிய பணமும் அந்நியச் செலாவணித் தேட்டத்தில் சேர்ந்து கொண்டது. பிற்காலத்தில் இலங்கையில் உல்லாசப் பயணத்துறை பெரும் தொழிலாக வளர்ந்ததால், பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடியதாக இருந்தது.

ஆனால் இத்தொழில்கள் யாவும் வெளிநாட்டுச் சந்தைகளையும், சர்வதேசப் போக்குவரத்தையும் நம்பியிருந்ததால், கொரோனா நோய்த் தாக்கம் ஏற்பட்டதும், உலகமே முடங்கிப் போனதால் அதன் தாக்கம் இலங்கையையும் பெருமளவு பாதித்துள்ளது. இந்த நிலைமையில் நாட்டை இயல்பாகக் கொண்டு நடத்துவதற்கு சர்வதேச நிறுவனங்களிடமும், நாடுகளிடமும் மேலும் கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், ஏற்கெனவே பெற்ற கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்காகவும் மேலும் கடன் பெற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை நாட்டை முற்றாக முடக்கிப் போடுவதுடன், அந்நிய சக்திகளுக்கு நாட்டை அடகு வைக்கும் நிலையையும் நிச்சயமாக உருவாக்கும். இதிலிருந்து எவ்வாறு நாட்டை மீட்டெடுப்பது என்பதே அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் முன்னால் உள்ள பெரும் கேள்வியாகும்.

இலங்கை இன்னமும் ஒரு விவசாய நாடு. எமது நாட்டில் போதிய நில வளமும், நீர் வளமும், கடல் வளமும், போதிய மனித வளமும் உண்டு. இருப்பினும், நாம் இன்னமும் அரிசி உட்பட பல உணவு தானியங்களையும், கடல் உணவுகளையும் இறக்குமதி செய்யும் நிலைமையிலேயே இருக்கின்றோம். உண்மையில் இந்த உணவு வகைகளை நாம் எமது தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். அந்த மேலதிக உற்பத்தியை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டி, எம்மால் உற்பத்தி செய்ய முடியாத சில அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். அப்படி இல்லாமல் எம்மால் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பொருட்களையே நாம் இன்னமும் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம் என்றால், எமது பொருளாதாரத் திட்டமிடலில் ஏதோ கோளாறு இருக்கிறதென்றே அர்த்தம்.

எனவே, தற்போதைய அரசாங்கம் முதலில் உணவில் தன்னிறைவு பெறுவதற்கான இலக்கை நிர்ணயித்துச் செயல்பட வேண்டும். அதன் பின்னர் அப்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான இலக்கை எட்ட வேண்டும். அது மட்டுமின்றி, எமது பாரம்பரிய ஏற்றுமதி பொருட்களான பெருந்தோட்ட உற்பத்திகளை பெருக்கும் வகையில் நவீன உத்திகளைக் கையாண்டு அவற்றின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அத்துடன் தைத்த ஆடைகள் உற்பத்தி, இரத்தினக்கல் ஏற்றுமதி, வாசனைப் பொருட்கள் ஏறுமதி, ஆயுர்வேத மருந்து உற்பத்தி, துறைமுக சேவைகள், பெரிய – சிறிய தொழிற்சாலைகள் போன்றவற்றில் கவனம் செலுத்தி சகல துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்கி, நாட்டை தன்னிறைவான நிலைக்குப் படிப்படியாகக் கொண்டு செல்வதற்கு முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே நாட்டை படிப்படியாக அந்நியக் கடன்களிலிருந்து விடுவிக்க முடியும்.

உதாரணமாக, எமது நாட்டின் பொருளாதார நிலையை விளக்க ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம். சீனா எமது மிக நெருங்கிய நட்பு நாடு. பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நெருக்கடியான தருணங்களில் இலங்கைக்கு உதவிய – உதவுகின்ற நாடு. ஆனால் எமது இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் சமமாக இருக்கின்றதென்றால், இல்லை என்பதே பதில். 2019இல் இலங்கை சீனாவுக்கு ஏற்றுமதி செய்த பொருட்களின் பெறுமதி 229 மில்லியன் டொலர்கள். ஆனால் சீனாவிடமிருந்து இலங்கை இறக்குமதி செய்த பொருட்களின் பெறுமதி 4 பில்லியன் (400 மில்லியன்) டொலர்கள்!

இந்த நிலையை எட்டுவதற்கு உள்நாட்டில் மக்கள் சமாதானமாகவும், மன நிம்மதியாகவும் வாழக்கூடிய சூழல் இருக்க வேண்டும். உள்நாட்டில் குழப்ப நிலையைத் தோற்றுவித்திருந்த 30 வருடகால யுத்தத்துக்கு 2009இல் வெற்றிகரமாகத் தீர்வு கண்டது இன்றைய அரச தலைவர்கள் அன்று நாட்டுக்கும் மக்களுக்கும் செய்த அளப்பரிய சேவை என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், அந்தப் போர் உருவாவதிற்குக் காரணமாய் அமைந்த இனப்பிரச்சினை இன்னமும்

தீர்க்கப்படாமல் பழைய நிலையிலேயே அப்படியே தொடர்கிறது. போரை முடித்தவர்கள் என்ற வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய கடமையும் இன்றைய அரச தலைவர்களுக்கு உண்டு. நாட்டில் சிறுபான்மை இன மக்களைப் புறக்கணித்து வைத்துக்கொண்டு, இன ஐக்கியம் நிலவாத ஒரு சூழ்நிலையில் பொருளாதார அபிவிருத்தி என்பது நினைத்தும் பார்க்க முடியாத விடயமாகும்.

இந்த விடயத்தில் வண்டிக்கு முன்னால் மாடுகளைப் பூட்டுவதா அல்லது மாடுகளுக்கு முன்னே வண்டியைப் பூட்டுவதா என்ற ஒரு தர்க்கத்தில் அரச தலைவர்கள் இருப்பதாகத் தெரிகிறது. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தினால் இனப்பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும் என அரச தலைவர்கள் கருதுகிறார்கள். அது தவறான கருத்தோட்டம். அவர்கள் கருதும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கே முதலில் இனப்பிரச்சினை தீர்கப்பட்டு நாட்டில் இன ஒற்றுமையும் சமாதானமும் நிலவ வேண்டும் என்பது முக்கியமானது என்பதை முதலில் அரச தலைவர்கள் உணர்வது அவசியமானது.

# வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறும் தமிழக மீனவர்கள்

கொரோனா தொற்றைக் கருத்திற் கொண்டு கைது செய்யப்படாமை காரணமாக தென்னிந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்புக்குள் அத்துமீறி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவது அதிகரித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான தமிழக மீனவர்கள் தமது கடல் எல்லையைத் தாண்டி, வடமாகாண கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் கொரோனாவின் பாதிப்பு தீவிரமாகியுள்ளது. கொரோனாவுக்கு எதிரான முன்னெச்சரிக்கையாக தமிழக மீனவர்களுடன் எந்தவொரு தொடர்பும் தவிர்க்கப்படுவதால், அத்துமீறும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்வதில்லை.

இதனையடுத்தே இழுவைப்படகுகளை பயன்படுத்தி தமிழக மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான காணொலி கலந்துரையாடலின் போது, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்ததார். ஆனால் இந்திய பிரதமர், மீனவப் பிரச்சினை தொடர்பில் சரியான பதிலை வழங்கவில்லை என, இலங்கை பிரதமருடன் அந்தக் காணொலி சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் தேவானந்தா கூறியிருந்தார்.

# இலங்கையில் முதியோர் தொகை அதிகரிப்பு!

இலங்கையில் மிக விரைவில் இளையோர் எண்ணிக்கையை விட முதியோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

2018ம் ஆணடு சனத்தொகைக் கணக்கெடுப்பினபடி இலங்கையின் மொத்த சனத்தொகை 21.67 மில்லியன் ஆகும். இத்தொகையில் 14 மில்லியன் பேர், அதாவது மூன்றில் இரணடு பங்கினர் தற்போது 55 வயதைத் தாண்டியவர்களாக இருக்கின்றனர். ஐ.நா. சனத்தொகை நிதியத்தின் மதிப்பீட்டின்படி, 2030ம் ஆண்டளவில் இலங்கை சனத்தொகையில் ஐந்து பேருக்கு ஒருவர் 60 வயதைத் தாண்டியவராக இருப்பார் எனவும், 2041 இல் இது நாலு பேருக்கு ஒருவராக அதிகரிக்கலாம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

தென்னாசியாவில் இலங்கையிலேயே முதியோரின் எண்ணிக்கை மற்ற நாடுகளைவிட வேகமாக அதிகரித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கைச் சனத்தொகையில் ஏற்பட்டு வரும் இந்த முதியோர் அதிகரிப்பு அரசு மட்டத்திலும், குடும்பங்களைப் பொறுத்தமட்டிலும் பல சவால்களை ஏற்படுத்தக்கூடும் என இத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இலங்கையில் அதிகரித்து வரும் முதியோர் தொகையானது எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தினை நெருக்கடிக்குள்ளாக்குவதுடன் முதியோர்களின் வாழ்க்கை முறையிலும் பல்வேறு நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தகவல் ஆதாரம்: பியூமி பொன்சேக

# கண்ணீர்விட்டு அழுத வடகொரிய தலைவர்

வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் (Kim Jong-un) இராணுவ அணிவகுப்பு விழாவின்போது கண் கலங்கினார். இவ்வாறு அவர் முன்னொருபோதும் கண்கலங்கியது கிடையாது.

தாய்நாட்டுக்காகப் பல தியாகங்களைச் செய்த வீரர்களுக்கு நன்றி கூறியும், குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்தத் தவறியதற்கு வருத்தம் தெரிவித்தும் கிம் கண்ணீர் விட்டார்.

வட கொரியாவை ஆளும் தொழிலாளர் கட்சி தோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனைக் கொண்டாடும் வகையில், ஒக்ரோபர் 10ஆம் திகதி நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது.

அதில் கிம், அண்மையில் சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மீண்டு வர உதவியதற்கும், கொரோனா வைரஸை நாட்டிற்குள் நுழையவிடாமல் கட்டுப்படுத்தியதற்கும் இராணுவ வீரர்களுக்கு நன்றி கூறினார். தமக்கும், தாம் எடுக்கும் முடிவுகளுக்கும் தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் வட கொரியர்களுக்குத் தமது நன்றிகள் போதுமானவை அல்ல என்றும் கிம் குறிப்பிட்டார்.

“எங்கள் மக்கள் வானத்தைப் போன்று உயரமாகவும், கடல் போன்ற ஆழமாகவும் என்னில் நம்பிக்கை வைத்துள்ளனர், ஆனால் எப்போதும் அந்த நம்பிக்கையை தக்கவைத்து திருப்திப்படுத்துவதில் நான் தவறிவிட்டேன். அதற்காக நான் மனம் வருந்துகிறேன்” என்று உருக்கமாக கிம் தெரிவித்தார்.

வட கொரியாவில் வைரஸ் தொற்றால் ஒருவர் கூட பாதிக்கப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# நோபல் பரிசுகள் 2020




மனித குலத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் தத்தம் துறையில் (பௌதீகம், இரசாயனம், இலக்கியம், மருத்துவம் மற்றும் அமைதி) பெரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருக்கும் சிறந்த மனிதர்களுக்காக அறிவிக்கப்பட்டிருக்கும் 2020 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசுகள் தொடர்பாக நாங்கள் அனைவரும் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

உடற்கூற்றியல் அல்லது மருத்துவத் துறைக்கான நோபல் விருது ஹார்வே ஜே. ஓல்ட்டர், மைக்கேல் ஹவுட்டன், மற்றும் சார்லஸ் எம். ரைஸ் (Harvey J. Alter, Michael Houghton, Charles M. Rice) ஆகிய மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பௌதீகத்திற்கான நோபல் பரிசின் பாதித் தொகை ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரபல பௌதீகவியலாளர் ரோஜர் பென்ரோஸ் (Roger Penrose) என்பவருக்கும், மீதமுள்ள பாதிப் பரிசுத் தொகை ஜெர்மனியின் மாக்ஸ் பிளாங்க் நிறுவனத்தைச் சேர்ந்த ரெய்ன்ஹார்டு ஜென்ஸல் (Reinhard Genzel) மற்றும் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆண்ட்ரியா கெஸ் (Andrea Ghez) ஆகிய இருவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

இரசானவியலுக்கான நோபல் பரிசு இம்மானுயேல் ஷார்ப்பான்ட்டியே (Emmanuelle Charpentier), ஜெனிஃபர் ஏ. டௌட்னா (Jennifer A. Doudna) என்ற இரண்டு பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஹெபடைட்டிஸ் – சி (Hepatitis-C) வைரஸானது ஹெபடைட்டிஸ் – பி (Hepatitis-B) போன்றே மனித குலத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. உலக சுகாதார அமைப்பின் (WHO) உலக ஹெபடைட்டிஸ் அறிக்கையின்படி 2015 இல் 134 இலட்சம் பேர் ஹெபடைட்டிஸ் – பி வைரஸாலும், ஹெபடைட்டிஸ் – சி வைரஸாலும் மரணமடைந்திருக்கிறார்கள். ஹார்வே ஜே. ஓல்ட்டர், மைக்கேல் ஹவுட்டன், சார்லஸ் எம். ரைஸ் மூவரும் ஹெபடைட்டிஸ் – சி வைரஸில் செய்த ஆய்வுகளுக்காக அவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஹெபடைட்டிஸ் – சி வைரஸின் தோற்றுவாயைக் கண்டுபிடித்தது அவர்களின் முக்கியமான சாதனை. இதன் மூலம் ஹெபடைட்டிஸ் – சி நோய்ப் பரவலை நம்மால் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது. எதிர்காலத்தில் ஒட்டுமொத்தமாக ஹெபடைட்டிஸ் – சி வைரஸ் அழிக்கப்படுமானால் அதற்குத் தற்போதைய மூன்று நோபல் சாதனையாளர்களின் பணிகளும் முக்கியக் காரணமாக இருக்கும்.

கருந்துளை (Blackhole) பற்றிய ஆய்வுகளுக்காக பௌதீகவியலுக்கான பரிசை ரோஜர் பென்ரோஸ், ரெய்ன்ஹார்டு ஜென்ஸல், ஆண்ட்ரியா கெஸ் ஆகியோர் பகிர்ந்து கொள்கிறார்கள். 1915 இல் ஐன்ஸ்டைன் முன்வைத்த பொதுச் சார்பியல் கோட்பாடானது கருந்துளைகளின் இருப்பு பற்றிய கணிப்புகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. 1960களில் கருந்துளைகளின் இருப்பை உறுதிப்படுத்தும் கோட்பாடுகளை ரோஜர் பென்ரோஸ் உருவாக்கினார். ரெய்ன்ஹார்டு ஜென்ஸலும் ஆண்ட்ரியா கெஸ்ஸும் வேறு வகையில் பங்காற்றியிருக்கிறார்கள். நமது சூரிய மண்டலம் இருக்கும் பால்வெளியின் மையத்தில் இருப்பது ஒரு கருந்துளையே என்பதை இவர்களின் ஆராய்ச்சி உறுதிப்படுத்தியிருக்கிறது. ரோஜர் பென்ரோஸின் பங்களிப்பு கோட்பாட்டு ரீதியிலானது என்றால், இவர்களுடைய பங்களிப்பு அவதானிப்பு ரீதியிலானது. இயற்பியலுக்காக நோபல் பரிசு பெறும் நான்காவது பெண் ஆண்ட்ரியா கெஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவியல் துறைகள் சில சமயம் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதது என்பதற்கான அடையாளம்தான் இந்த ஆண்டு இரசாயனவியலுக்காக அறிவிக்கப்பட்டிருக்கும் நோபலும். 'சி. ஆர். ஐ. எஸ். பி. ஆர் – கேஸ்9' (CRISPR/Cas9) மரபணு செம்மையாக்கத் தொழில்நுட்பத்துக்காக இம்மானுயேல் ஷார்ப்பான்ட்டியே, ஜெனிஃபர் டௌட்னா ஆகிய இருவருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கும் பரிசானது மருத்துவத் துறைக்கும் மிகவும் நெருக்கமானதே.

ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படும்போது அனைவரும் பெண்களாக இருப்பது நோபல் வரலாற்றில் இதுவே முதன்முறை ஆகும். விலங்குகள், தாவரங்கள் போன்றவற்றைப் பொறுத்தவரை, இந்த மரபணு செம்மையாக்கத் தொழில்நுட்பம் பெரிய பிரச்சினை தராதவையாக இருந்தாலும், இதை மனிதர்கள் அளவில் கொண்டு செல்லும்போது பெரும் ஆபத்தாக மாறிவிட வாய்ப்பிருக்கின்றது.

உலக உணவுத் திட்டம் (World Food Programme - WFP) என்ற அமைப்பு இவ்வருடத்துக்குரிய அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளது. 1962 இல் ஈரான் நாட்டில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் அதைத் தொடர்ந்து ஒக்டோபரில் தாய்லாந்து நாட்டில் ஏற்பட்ட புயல், அல்ஜீரியாவில் தவித்த 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள் போன்ற பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு 1963 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் உலக உணவுத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பு இத்தாலி நாட்டின் ரோம் நகரைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. நிலநடுக்கம், சுனாமி போன்ற இக்கட்டான காலகட்டங்களில் பாதிக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்களுக்கு இந்த அமைப்பின் வழியே உணவளிக்கப்பட்டுள்ளது.

ஏல முறைகள் குறித்த ஆராய்ச்சிக்காக அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர்கள் போல் ஆர். மில்க்ரோம், ரொபர்ட் பி. வில்சன் (Paul R. Milgrom, Robert B. Wilson) ஆகிய இருவருக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் கவிஞர் லூயிஸ் குளுக் (Louise Glück) இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார்.